Almost all plants are green in colour due to Chlorophyll. They combine the carbon-di-oxide of the air, and water from the soil in the presence of sunlight and produce Carbohydrates. This inimitable process has been going on for millions of years. For every morsel of food that man takes he depends on some hours of work by the "plant laboratory".

The Chloroplast in the leaves contains, in addition to Chlorophyll, an yellowish subtsance called carotenes ($C_{40}H_{56}$) and another one called ($C_{40}H_{56}O_2$). All these substances perform the process (of producing Carbohydrates) called photosynthesis. Chlorophyll plays a major part in this reaction.

The name Chlorophyll was given in 1818 by Pelletier and Caventon. It is of two kinds: Chlorophyll-a and Chlorophyll-b. In leaves both kinds are present in the ratio of 2. 5: 3. 5. This may vary according to the intensity of light.

Eighty per cent of the sun's radiant energy is absorbed by the vegetation in sea. Only 2. 3% is absorbed in photosynthesis which is sufficient for the conversion of 3×10^{11} tons of carbon from carbon-di-oxide to organic compounds.

Animals, during respiration, exhale carbon-di-oxide. Plants take in the carbon-di-oxide, use the carbon alone and leave out the oxygen to the atmosphere, keeping the ratio of gases in the air a constant.

When green leaves are placed in acetone or alcohol the Chlorophyll dissolves in the alcohol. Chlorophyll taken in this way is a waxy solid exhibiting fluorescence. This has not been completely synthesised in the laboratory though attempts made in that direction have come very near success.

It has already been said that carbohydrates are produced from carbon-di-oxide, water and sunlight. In this process Chlorophyll is not affected chemically. It serves simply as a catalyst to speed up the chemical reaction. The speed of the process depends on the amount of sunlight.

As in other chemical reactions, carbohydrate is not produced at the first instance. Some intermediary products are formed. Formerly it was thought that Formaldehyde (HCHO) is formed first, but now claims have been made for the production of ascorbic acid.

Photosynthesis is the reverse of combustion or respiration. The great difference between these two lies in the energy balance. No reaction can end with an overall gain and storage of chemical energy, because the material previously synthesized has to be sacrificed to make the reactions go. In photosynthesis it is the light energy which in the course of the very reaction furnishes the necessary combustible material.

Three sets of reactions take place in photosynthesis:

(a) Water in the presence of the chloroplasts is decomposed into 'substances having hydrogen' and 'substances having oxygen.'

(b) The combination of carbon-di-oxide with the 'hydrogen-having substances.'

(c) The disposal of the 'compounds having surplus oxygen.' These three processes are responsible for

the existence of plants. It has been proved that even dry leaves give out oxygen when moistened and placed in sunlight.

According to H. Fischer, in 1939, the structure of Chlorophyll is:



An important and notable difference between Chlorophyll-a and Chlorophyll-b is that, in the ring II if a —CH 3 group is substituted by a =CHO group, Chlorophyll-a becomes Chlorophyll-b.

The carbohydrate produced in this way is stored in tubers, roots and leaves and as sugar in stems.

"........Specifically the leaf rearranges carbon, oxygen and hydrogen into a variety of carbohydrates, usually sucrose, one of the basic foods of all living things.

The leaf then converts the sugar into starch which is stored in leaves, seeds and roots. Since the tree can't digest

starch, the leaf with incredible virtuosity changes the starch back into sugar as the tree demands food.

This process of photosynthesis, to which we owe our green and habitable world, is most active during the two or three hours on either side of the noon and ends when night falls."

The major part of our food is composed of starch which is produced by Chlorophyll. Without starch we cannot live. So it will not be an exaggeration to say that there can be no life without Chlorophyll.

The worst education that teaches self-denial is better than the best that teaches everything else and not that.

—*J. Sterling.*

Universal suffrage, without universal education, would be a curse.

—*H. L. Wayland.*

It is by education I learn to do by choice what other men do by the constraint of fear.

—*Aristotle.*

Modern education too often covers the fingers with rings and at the same time cuts the sinews at the wrists.

—*Sterling.*

School-houses are the republican line of fortifications.

—*Horace Mann.*

Education does not mean teaching people to know what they do not know; it means teaching them to behave as they do not behave.

—*Ruskin.*

The poorest education that teaches self-control is better than the best that neglects it.

—*Anon.*

THE PROBLEM OF HUMAN SUFFERING

A. FINNEY SHADROCH, B. A. (B. T. Student)

The problem of human suffering has been troubling thinking men throughout the ages. Far back through the centuries men have been faced with this question and they have given various explanations.

Suffering has been considered as the punishment due to sin and therefore well deserved. The Jews equated suffering with punishment meted out by God for disobedience.

The Psalmist was troubled very much by an even worse problem than this – the suffering of a righteous man and the prosperity of the wicked—until he realized that the latter were really being prepared for "destruction". The Jews in the time of Christ faced it. The disciples of Christ seem to hint at the possibility of a man sinning even before he is born, for this man is "born blind." They assumed that suffering was punishment for sin.

One cannot deny altogether that sin and suffering have some connection. Children suffer owing to parents' sins. Innocent, simple, common people undergo untold suffering as a result of war. Then why does God who knows that sin would bring on suffering permit sin? If there be a good God why does He not altogether prevent this evil? Why does God allow innocent children and people to suffer? But these questions have close connection with that of free will.

So-called merited suffering has a corrective effect—the case of the prodigal son in The New Testament. "He came to himself". Till then he was "beside himself". Take, again, the problem of disease and death. Ill health and confinement to bed make men, who in the rush of human activity forget God, to think about Him and of their own end. The loss by death of some one very dear and near to us makes God most real to us.

A mother once brought before a doctor her son who had broken his fore-arm. Whenever the boy's hand was handled by the doctor, the mother's suffering seemed more

acute than the boy's. Gandhiji's blood-pressure went up when his wife went into a temple where untouchables were not admitted. We find the best examples of such vicarious suffering in the life, suffering and death of Christ. Peter is about to deny his Lord, but Jesus prays for him. Judas sins and Christ suffers in Gethsemane. Love suffers, God identifies Himself with human suffering. The so-called State leaders cause wars, but the innocent common people of the world, poor women, helpless little children, suffer enormously. Take the case of infectious diseases in villages. The sin of some infecting water makes thousands suffer. The selfishness of the rich in gathering wealth causes acute poverty and difficulties to the poor. Hence the condemnation of the rich by Jesus and the persecution that He suffered. He whose body breaks up and suffers physical agony, disease, injury, starvation, imprisonment, martyrdom, he too suffers with God.

When the teacher or the father or mother begins to punish an erring son, does not that act cause more mental pain and even physical pain to the teacher or parent than to the son? When Gandhiji was a boy his father wanted to cane him one day for some wrong done by him. The father's hand trembled and shook till the cane fell off his hand, because of the love of the father and his sorrow for the erring son.

Unselfish suffering for others binds Godly people together. Fellow feeling and the capacity to sympathise will be the result. There is one very important point that we must remember when we think of human suffering. We must view life as something eternal. Life is not merely what we see here and now; it continues after death. Suffering in the flesh glorifies the never-dying inner personality. We should not merely look at the things that are seen by human eyes, but the things which, though not seen by them, are yet real and of eternal value. A materialistic outlook upon life has blinded men. Hence the prostitution of science which has been converted into a vehicle of human misery and destruction instead of being entirely used for human happiness.

CONNEMARA PUBLIC LIBRARY
23 APR 1957
MADRAS

Guindy Engineering College
Main Entrance to
Centenary Exhibition



Alagappa College of Technology
Entrance to
Centenary Exhibition



Radio-controlled Car
Centenary Exhibition

Highways Department Stall
Centenary Exhibition



Gandhi Mandap
Inside View

[*Our Cameraman L. Kaliappan*

படங்கள் : L. காளியப்பன், பி.ஏ.

1

2



CONNEMARA PUBLIC LIBRARY
23 APR 1957
MADRAS

3



4



5



6

7



(எதிர் பக்கத்தில் விளக்கம் காண்க)

1 செருக்குடன் மாமலை மீதினில் நிற்கும்
திருக்கழுக் கோவிலிது காண்.

2 மாதொரு பாகனும் மாமணி வண்ணனும்
யாதொரு வேற்றுமையும் இல்லாமல் — ஆதி
இறைவன் ஒருவன், பெயர்பலவாம் என்றே
அறையும் **தலசயனம் பார்.**

3 தமிழ்வேந்தர் செய்த கலைத்தொண்டு நீரில்
குமிழ்போல் ஆகாத வண்ணம் — இமிழ்கடல் சூழ்
தொண்டை வளநாட்டின் பல்லவர்கோன் **மாமல்லன்**
பண்டு செதுக்கிய **கல் தேர்.**

4 பேரலை ஈர்த்துக் கரையினிற் சேர்த்திடும்
ஊர்போல நிற்கும் **கலம்.**

5 என்றும் இசைபரப்பி எங்கும் புகழ்மணக்கக்
குன்றுபோல் வாழ்ந்த தமிழன்னை — இன்றும்
அமிழ்தம்போல் இன்னிசையால் ஆருயிரை ஓம்பும்
தமிழ் இசை மன்றம் இது.

6 வாழ்வுக் கடலில் வழிகாட்டும் சான்றோர்போல்
தாழ்வுக் கடலில் துணையாகும் நண்பர்போல்
ஆழ்கடல் சென்றே அலைப்புறும் கப்பற்குச்
சூழ்கரை காட்டும் ஒளி.

7 நெட்டைச் சவுக்கென நீண்டு வளர்ந்திடும்
ஒட்டைச் சிவிங்கிதான் நான்.

பாடல்கள் : **R. S. ரோச், பி.ஏ.**



Sri A. J. Sam Davis
Our English Orator



Sri A. Sankaravallinayakam
Our Tamil Orator

Sri M. Ramakrishnan
Our Poet

CONNEMARA PUBLIC LIBRARY
23 APR 1957
MADRAS



Sri S. Ramasubramanyan
Our Actor



Sri L. Kaliappan
Our Tamil Critic & Orator

CONNEMARA PUBLIC LIBRARY
23 APR 1957
57
MADRAS

தேனிசை

வித்வான். மு. இராமகிருட்டினன், பி. ஏ. (பி. டி. மாணவன்)

வீங்வீங் வீங்வென மிழற்றி யாங்கணும்
தீங்குழல் காட்டும் தேனிசை கேள்நீ
காண்டகு மஞ்சட் கால்கொண் டாடினும்
தூங்கா துஞற்றும் தொழிற்றிறம் ஓர்நீ
வெங்கதிர் வீசிடும் வேனிற் காலே
பொங்கு மலர்தொறும் புதுத்தேன் தேர்ந்திடும்
மங்குல் மாமழை வான்பொழி காலே
அல்லும் பகலும் ஆக்கிடும் மெழுகே
வீங்வீங் வீங்வென மிழற்றி யாங்கணும்
தீங்குழல் காட்டும் தேனிசை கேள் நீ
கொக்கர கோவெனக் கூவிடும் சேவல்
கேழ்கிளர் கதிரோன் கீழ்த்திசை வருமென
அவ்வுரை செவிதனில் ஆர்த்திடு முன்னே
பவ்வத் தொலிதிரைக் கவ்வைத் தேனினம்
எவ்வெத் திசையினும் எழுப்பிடும் இன்னிசை
வீங்வீங் வீங்வென மிழற்றி யாங்கணும்
தீங்குழல் காட்டும் தேனிசை கேள்நீ
இன்னிசை பாடி இனிதே திரியினும்
பன்மலர் நாடிப் பகற்பொழு தெல்லாம்
தாழ்பூந் துறையினும் தண்மலர்க் காவினும்
கொங்குதேர்ந் தார்த்திடும் கொள்கையைக் கொள்நீ
யாங்கணும் உண்பேம் உழையேம் என்போர்
தங்களைக் காணல் தருநகை என்றே
கல்சேர் கதிரவற் கண்டு தேனினம்
நல்வகை யுறைவிடம் நாடி யடைந்திடும்
அறிவிற் குறையினும் அதன்வயிற் காணும்
உழையா துண்ணேம் என்னுமிவ் வுண்மையை
ஆறறி வுடையமென் றறியா மாக்கள்
உழையா துண்ணல் ஒழிக
தேறல் தேர்ந்திடும் தேனிசை தெரிந்தென்.

காற்றின் கதை

ஆர். எஸ். ரோச், பி. ஏ. (பி. டி. மாணவன்)

உருவமொன் றில்லை யேனும், உடலுறுப் பில்லை யேனும்
பெருநிலம் முழுதும் ஆளும் பெருவலிக் கடவுள் போல,
திருமிகப் பெற்று, எங்கும் திரிந்திடும், பரந்து தங்கும்
பெருமைகூர் காற்றே வாராய்; உன்னுடைக் கதையைக் கூறாய்! 1

நற்றமிழ்ப் புலவர் என்னை நன்மலைப் பிறந்தாய் என்றார்;
கற்றநல் அறிவின் வல்லார் கடுகியே உலகம் சுற்றும்
முற்றிய விசையி னாலே முளைத்தவன் நீயே என்பார்;
சிற்சில நாட்டில் அன்பர் சிறப்புடைத் தெய்வம் என்பர். 2

இளமையில் உலக மாந்தர் இனியநற் குழந்தை யாக
உளங்கனி மழலை பேசி உவந்திடச் செய்தல் போல,
களிப்புறச் செய்து, மக்கள் களைப்பினை நீக்கும் இன்பக்
குளிரிளம் தென்றல் ஆவேன்; கொழுஞ்சுகம் உலகுக் கீவேன். 3

சிந்துபூங் கொம்பர் தம்மைச் சிறப்புறத் தழுவி வருவேன்;
வந்துபோம் மக்கட் கெல்லாம் வரையிலா இன்பம் தருவேன்;
நொந்துடல் வாடிச் சோர்ந்து, கதிரவன் வெம்மைச் சூட்டில்
வெந்திடும் பூக்கள் ஈண்டி, விளித்திடும் என்னை வேண்டி. 4

ஆறுடன் குளங்கள் ஏரி அழகுடன் நெளிந்தசைந்து
வீறுடன் என்னை ஏற்கும்; விதவிதப் பூக்களோடு
நாறிடும் கரையில் வாழும் நறுஞ்செடி கொடிகள் இன்பம்
ஊறிட உவந்து பாடும்; உணர்ச்சியால் நடனம் ஆடும். 5

வட்டமாய் வளைந்து நீண்ட வானத்தைத் தாங்க வேண்டித்
திட்டமாய்ச் செய்து சிற்பி நிறுத்திய பளிங்குத் தூண்போல்
எட்டிடா உயரம் செல்வேன், எழும்பியே சுழன்று வீசி;
முட்டிடும் யானை ஏனம் முறைத்திடின் எட்டும் வானம். 6

கொடுமனக் கூனி மாந்தர் கொள்கைகள் போல நானும்
திடுமென மாற்றம் கொள்வேன்; திரைகடல் பொங்கச் செய்யும்
கடுவலிப் புயலாய் மாறிக் கரைகளைத் தகர்ப்பேன்; வீடும்
நெடுமரக் காடும், நாடும், நெருங்கியே மண்ணில் கூடும். 7

மலைகளை மடியச் செய்வேன்; மணிநீர் தன்னைக் காணு
உலைவுறு ஆற்றில் வெள்ளம் உறுமியே ஓடச் செய்வேன்;
இலைமலி காட்டைப் பாலை நிலமென மாறச் செய்வேன்;
கலைமலி ஊரில் பெய்வேன்; கரையிலாக் கடலாய்ச் செய்வேன். 8

தெளிவிலா அறிவின் மக்கள் தம்முளே கொன்று சாகும்
ஒளியுடை அணுவின் குண்டும் உறுவலி ஆவிக் குண்டும்
வெளிறதாய் என்முன் ஆகும் வெந்திறல் நோக்கி அன்றோ
'வளிமிகின் வலியில்' லென்றே வரைந்துளார் சான்றோர் அன்றோ? 9

கருநிற மேகம் வானில் கடுகியே செறியக் கூட்டிப்
பருவத்திற் பொழியச் செய்யும் பருவநற் காற்றும் யானே;
பெருமைகூர் மனிதா! உன்னைப் பெரியனாய் மதிக்கின் றாயே,
உருவமில் எனக்கு யாரே, உலகினில் ஈடு பாரே. 10

மென்மையின் தென்றலோடு மிகுவலிப் புயலும் கூறும்;
நன்மையில் தீமை உண்டு; தீமையில் நன்மை உண்டு;
மன்னியே உலகில் வாழும் இவ்விதி கண்டும் மக்காள்,
நன்மையில் களித்தல் ஏனோ? தீமையில் கலங்கல் ஏனோ?

விஞ்ஞானக் கலை வளமும் மொழிப் பிரச்னையும்

எஸ். சிவசுப்ரமணியம், பி. எஸ்ஸி., பி. டி.

இன்றைய உலகை விஞ்ஞானம் ஆள்கிறது. ஒரு நாட்டின் வளம் பெருக, அந்நாட்டில் விஞ்ஞானக்கலை வளம் பெருகவேண்டும். பின் தங்கிய நாடுகளின் வரிசையில் சேர்க்கப்படும் நமது நாடு முன்னேற்றப் பாதையிற் செல்லப் பல திட்டங்கள் பொருளாதாரத்துறையிலும், தொழில் துறைகளிலும், வகுக்கப்பட்டு வருகின்றன. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் விஞ்ஞான அறிவு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை என்பது கண்கூடு. இந்த அடிப்படையே இன்று பயிற்சிமொழிப்பிரச்னை என்ற பெரும் குழப்பத்திற்கு இலக்காகியுள்ளது. இப் பிரச்னை குறித்து நாட்டில் நிலவும் கருத்துக்கள் பல. தமிழ்ப்பத்திரிகையுலகில் சீரிய முறையில், கலைப் பணியாற்றிவரும் "கலைக்கதிர்" அண்மையில் பயிற்சி மொழிச் சிறப்பு மலராக வெளிவந்தது. பயிற்சிமொழிபற்றிப் பல அறிஞர்களின் கருத்துரைகளும் அம்மலரில் தொகுக்கப்பட்டிருந்தன. இக் கருத்துக்கள் யாவற்றையும் சிறப்பாக நான்கு வகைப்படுத்தலாம்.

1. ஆங்கிலம் வளமாக்கப்பட்ட ஒரு மொழி. அறிவியலின் நூற்றுக்கணக்கான துறைகளுக்கு ஏற்ற கலைநூல்களும், ஆராய்ச்சி இதழ்களும் நிரம்பிய அரிய கருவூலம் ஆங்கிலம். பிறநாட்டு அறிஞர் பலர் வந்து நம் நாடு நலம்பெறத் தொண்டாற்றவும், நம் நாட்டவர் பிற நாடுகளுக்கும் நம் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று தம் அறிவினை விருத்தி செய்யவும் தேவையான மொழி ஆங்கிலம்.

எனவே பயிற்சி மொழி ஆங்கிலமாகவே தொடர்ந்து வர வேண்டும். இன்றேல், நாட்டில் 'அறிவுத் தரம்' குறையும்."

2. "பிள்ளைப் பிராயம் தொட்டு ஒருவன் சிந்தையோடும் எண்ணத்தோடும் ஒன்றுகலந்து உருவாகிய மொழிதனில் கற்ற அறிவுதான் ஒருவன் மனத்தில் நிலைத்து நிற்கும்; தொடர்ந்து ஆக்கச் சிந்தனைக்கு அடிகோலும். எனவே தாய்மொழியே பயிற்சி மொழியாக வேண்டும். தாய்மொழியில் கலைச்சொற்களும் கலை நூல்களும் உருவாதற்கு உரிய காலத்தை நிர்ணயித்து, அதுவரை ஆங்கிலத்தைக் கையாள வேண்டும்."

3. "கலைச்சொற்களும் நூல்களும் தோன்றும் வரை பயிற்சி மொழிமாற்றம் காத்திருக்கக்கூடாது. இவ்வாறு நாம் காத்திருப்பது, 'தழைக்குப்பின் நான் தோன்றுவேன்' என மரம் காத்திருப்பதையும், 'கரைக்குப்பின் நான் தோன்றுவேன்' என நதி காத்திருப்பதையும் போலாகும் என்பர் தாகூர். உடனடியாகவே தாய்மொழியில் போதனையை ஆரம்பிக்க வேண்டும். காலப்போக்கில் கலைச்சொற்களும் தேவையான நூல்களும் தாமாகவே உருவாகி வளர்ந்து விடும்."

4. "இந்தியா நம் நாடு. நாம் எல்லோரும் ஒரு நாட்டின் உறுப்பினர் என்ற உணர்ச்சி நிலைபெற நாட்டிற்குத் தேசியமொழி ஒன்று தேவை. அதுவே இந்தி ஆகும். ஆங்கிலத்தின் இடத்தினை இம்மொழிதான் ஏற்கவேண்டும். நாடு முழுதும் ஒரே மொழியில் பாடப்பயிற்சி பெறுதலே நலம்."

இந்நான்கனுள் இறுதியில் கூறிய கருத்தை வற்புறுத்துவோர் வெகு சிலரே. ஆங்கில மொழியை ஒதுக்கிவிட்டு, இன்னொரு புதிய மொழியைப் பயின்று, அம்மொழியிலே கலைச்சொற்களையும் புதிதாக இனி அமைத்து, அதனைப் பயிற்சி மொழியாக ஏற்றுக் கொள்வது நடவாததொரு காரியம். எனவே இக்கருத்தினை அறவே ஒதுக்கி இப்பிரச்னையை ஆராய்வோம்.

ஆங்கிலமே தொடர்ந்து பயிற்சிமொழியாக இருத்தல் வேண்டும் என்பதனை வற்புறுத்துவோர் இருபெரும் உண்மைகளை உளத்திற் கோடல் நலம்.

1. கல்வித்துறையில் ஈடுபட்ட உளவியல் ஆராய்ச்சியாளர் அனைவரும், 'தாய்மொழியே போதனை மொழிஆதற்கு ஏற்றது' என்று முடிவுசெய்துள்ளனர். புதுக் கருத்துக்களைக் கற்றுத் தெளிவு பெறவும் கற்ற கருத்துக்களை மனத்திற் கொண்டு ஆக்கச் சிந்தனையில் ஈடுபடவும் அதுவே வழியாகும்.

2. கருத்துக்களை அறிந்தால்மட்டும் போதாது; அவற்றினை ஆங்கிலத்தில் எழுதி வெளியிடும் ஆற்றலும் பெற வேண்டும் என்ற நிலையிருக்கும்வரை, விஞ்ஞான அறிவு வளர்ச்சியில் முழுதும் செலுத்த வேண்டிய நேரமும் சக்தியும் பாதி அளவிற்குமேல் வீணாகி விடுகின்றன. கருத்தினை அறிவதில் நாட்டம் குறைகிறது.

தாய்மொழியினைவிட்டு வேற்று மொழியில் அறிவியலைக் கற்று முதன்மையடைந்து விளங்கும் நாடு ஒன்றேனும் இன்று உலகில் இல்லை. ஆங்கிலக் கல்வியாற் பயனடைந்து உலகனைத்தும் போற்றுமளவு புகழ்பெற்ற விஞ்ஞான விற்பன்னர் சிலர் நம் நாட்டிலே உள்ளனர் என்பது உண்மையே. ஆனால், இவர்களைச் செயற்கைச் சூழலை வென்று வளர்ந்த அறிஞர்களாகவே நாம் கொள்ளவேண்டும். ஆங்கில வாயிலாக அறிவு பெற்ற காலத்தில் ஆக்கத்துறையில் நாம் சாதித்தவற்றை, அதே காலத்தில் தாய் மொழி மூலமே அறிவுபெற்ற ஜப்பான் முதலிய பிறநாட்டவர் சாதித்தவற்றுடன் ஒப்புநோக்கின் இது வெறும் வீணுரையன்று என்பது விளங்கும்.

ஆகவே, அறிவியற் கருத்துக்களை விளக்கிப் போதிக்க ஆங்கிலம் மட்டுமே உகந்ததன்று என்றுதான் முடிவுகட்டவேண்டும். ஆனால் அதே சமயத்தில் ஆங்கிலமொழி வேறு, ஆங்கிலக் கலைச் சொற்கள் வேறு என்பதை மறந்துவிடக்கூடாது. விஞ்ஞானப் பாட போதனையும் பயிற்சியும் நம் மொழியிலே நடைபெற வேண்டும் என்று முடிவு செய்யும் நேரத்தில், விஞ்ஞானக் குறியீட்டுச் சொற்களும் நம் மொழியிலேதான் இருக்கவேண்டும் என்று எண்ணக் கூடாது. அது தவறுடையது.

விஞ்ஞானக் குறியீட்டுச் சொற்களாக இதுவரை நாம் பயின்ற ஆங்கிலச் சொற்களையும், விஞ்ஞானம் வளர்ந்த நாடுகள் அனைத்தும் பின்பற்றும் பிறமொழிச் சொற்களையும் (International terms) அவ்வாறே நம் மொழியில் எழுதிக்கொண்டு பாடம் கற்பித்தலே நாட்டில் விஞ்ஞான அறிவு வளர உகந்த முறையாகும். இவ்வாறு பிற சொற்களைக் கையாண்டு வருவதால், அச் சொற்களே நமது மொழியில் நிலைத்து நின்றுவிடும் எனச் சிலர் ஐயுறலாம். அவ்வாறு அச் சொற்கள் நிலைபெறத்தான் வேண்டும் என்பதையே இக் கட்டுரை வற்புறுத்துகிறது. தமிழ் என்பது தனித் தமிழே, கலவை மொழியை விரும்புபவர் தாய்மொழிப் பற்று அற்றவராவர் என்ற எண்ணத்துடன் இப்பிரச்னையை அணுகக்கூடாது. காலத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மொழியும் இடம் கொடுத்துத்தான் வளரவேண்டும். பிறசொற்களுள், குறிப்பாக, அறிவியல் துறையில்

மட்டுமே கையாளப்படும் சொற்களுக்கு, இடங்கொடுப்பதால் ஒரு மொழியின் பழம்பெருவளம் ஒருபோதும் குன்ருது.

கலைச்சொற்களைப் புதிதாக உருவாக்க வேண்டியதில்லை. நமது மொழிமரபுக்குட்பட்ட முறையில் உலகப்பொதுக் குறியீடுகளை எழுத்துப் பெயர்ச்சி செய்து உபயோகிக்கவேண்டும் என்ற முடிவு கொண்டால் இலக்கிய நடையிலே தூய தமிழிலே எல்லைக்கோடு வகுத்துப் போதிக்கும் விஞ்ஞான ஆசிரியர்களும், படிக்கத்தக்க விஞ்ஞான நூல்களும் வரும்வரை வறிதே காத்திருப்போம் என்ற எண்ணம் நீங்கும். புதுச்சொற்கள் உருவாகும்வரை ஆங்கிலமே போதனுமொழியாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்திற்கும் இடமிருக்காது.

கலைச்சொன்மொழிபெயர்த்தலைத் தவிர்த்து உலகப் பொதுச் சொற்ருெகுதியைமட்டும் எழுத்துப் பெயர்த்து நாடு முழுதும் கையாளவேண்டும் என்று மத்திய அரசாங்கமும், பல்கலைக்கழகங்களும் முடிவு செய்யவேண்டும். அப்போதே, நமது நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் உலகத்திற்கும் என இரு வேறுபட்ட சொற்ருெகுதிகளால் உண்டாகும் குழப்பமும், ஒவ்வொரு பிரதேசத்தினரும் தத்தம் பகுதியிலேயே ஒடுங்கியிருக்கவேண்டிய நிலையும் தவிர்க்கப்படும். ஒரு பிரதேசத்தினர் மற்றப் பிரதேசங்களில் சென்று தொண்டாற்றவும், பேசும் அளவுக்குப் பிறமொழிகளைத் தெரிந்து கொண்டோ, அல்லது சாதாரண மொழிபெயர்ப்பாளர் உதவி கொண்டோ தம் கருத்துக்களைச் செவ்வன் உணர்த்தி அறிவினைப் பெருக்கிக்கொள்ளவும், வாய்ப்பு ஏற்படும். பிறநாட்டு நிபுணர்கள் நம்நாடு வரும்போது, அவர்களுடன் நம் அறிஞர் அளவளாவுதலும், நம்நாட்டவர் பிறநாடு சென்று உயர்கல்வி கற்பதும் எளிதின் அமையும்.

அறிவியல் என்பது ஆழங்காண முடியாத ஒரு பெருங்கடலாகும். அறிவியலிற்காணும் பற்பல பிரிவுகளின் பெயர்களுக்குப் பட்டியல் தயாரிப்பதே கடினமான வேலையாகும். அந்த ஒவ்வொரு பிரிவிலும் பல துணைப்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு துணைப்பிரிவிலும் பல கிளைப்பிரிவுகள் உள்ளன. ஒரு கிளைப்பிரிவில் ஒரு குறிப்பிட்ட பொருளை ஆராய்வதற்கு அறிஞர் தம் வாழ்நாள் முழுதையும் செலவிடுகின்றனர். இத்துணைப் பிரிவுகளிலும் பரவிக் கிடக்கும் கலைச்சொற்களையெல்லாம் பெரும் பொருளும் நேரமும் செலவிட்டு மொழிபெயர்க்க வேண்டுங்கொல்? இது சிந்தனைக் குரியதன்ருே? இச்சொற்களுக்கு ஈடான சொற்களைத் தரும் ஆற்றல் நம் மொழிக்கு இல்லை என்பது இதன் பொருளன்று.

கலைச்சொற்கள், சில அடிப்படைகளின்மீது வழக்கில் உலவ ஆரம் பித்து, பின்னர்க் காலக்கிரமத்தில் உறுதிபெற்றனவேயன்றித் திடீரெனத் தோன்றினவல்ல. அதுபோலவே அவற்றின் மொழிபெயர்ப்புச் சொற்களும் இவ்வாறுதாமிருக்கவேண்டும் என உடனடியாக அறுதியிட்டுக் கூறமுடியாது. காலப்போக்கிலேயே அவை நிலைபெறவேண்டும். சிறு உதாரணம்: இன்று உயர்தரப் பள்ளிகளில் "ஆக்ஸிஜன்" என்ற பெயரிலே பெரும்பாலும் Oxygen என்ற மூலகத்தைப் (Element)பற்றி மாணவர் படிக்கின்றனர். விஞ் ஞானப் படிப்புப் பாடப்புத்தகத்துடன் நின்றுவிடக்கூடாது. சிறு பிராயந்தொட்டே பொதுவிஞ்ஞானக் கட்டுரைகளையும் புத்தகங்களை யும் படிக்கும் பழக்கத்தினை மாணவரிடம் வளர்க்கவேண்டும் என்று விழைகிறார் ஆசிரியர். அவர் "ஆக்ஸிஜன்" சம்பந்தமான தமிழ்க் கட்டுரைகளைத் திரட்டி மாணவனுக்குக் கொடுக்கிறார். ஒவ்வொரு கட்டுரையிலும் அவன் பிராணவாயு, உயிரியம், உயிரகம், தீயகம், என்று புதுப்புதுப் பெயர்களையே காண்கிறான். தனக்குத்தெரியாத புதுப்பொருள் பற்றியது எனநினைத்து, கட்டுரை படிப்பதில் ஆர்வத்தை இழக்கிறான். காலப்போக்கிலே இத்தொடர்களில் ஒன்று பொதுவாக அமையலாம். மற்றவை மறையலாம். ஆனால் அதுவரை விஞ்ஞான மாணவர் தாமாகவே தம்மொழியில் வரும் நூல்களையும், கட்டுரைகளையும், சொற்குழப்பமின்றி விரும்பிப்படிக்க இயலாத நிலையிலேயேதான் துன்புறவேண்டுமா? சொற்குழப்பத் தில் நாம் சிக்கியிருக்கும் இந்த இடைக்காலத்திலே மற்ற நாடுகள் நம்மைவிட இன்னும் வெகு தூரம் முன்னேறிவிடும். இதுவரை பின்தங்கிய நிலையிலிருக்கும் நாம், மேலும் காலத்தை வீணாக்குதல் அறிவீனமேயாகும்.

இனி, நம் மொழியிலேயே பயிலும் மாணவருக்கு ஆங்கில மொழித்தொடர்கள் விளங்காத புதிர்ச்சொற்களாகத் தோன்றுமே என ஐயுறவேண்டாம். ஏனெனில், ஆங்கில வாயிலாக போதனை செய்வது, அலுவலகங்கள் நடத்துவது—இவை குறித்து மாறுபட்ட கருத்துத் தெரிவிப்போருங்கூட ஒருமுகமாக ஆங்கிலமொழியிற் போதனை நிலைத்திருக்கவேண்டும் எனவே முடிவுசெய்துள்ளனர். ஆழ்ந்த மொழி அறிவும் இலக்கியச்சுவை நுட்பமும் பெறும் அள விற்கு ஆங்கிலத்தைப் பயிலாவிடினும், ஆங்கில உரை நடை நூல் களைப் படித்துப் புரிந்து கொள்ளுமளவு அம்மொழியிற் பயிற்சி பெற்றே வருவர். ஒரு மொழியிலே நம் கருத்துக்களைச் சீராக எழுதக் கற்றற்குத்தான் அதிக காலம் செலவிடவேண்டும். அம் மொழியைப் படித்துப் புரிந்துகொள்ளுமளவு கற்றல் எளிதேயாகும்.

எனவே, விஞ்ஞானக் கருத்துக்களை நம் மொழி வாயிலாகப் படிக்கும் கல்லூரி மாணவர் ஆங்கில நூல்களைப் படிக்கும் திறமையும் பெற்றிருப்பர். கலைச்சொற்றொடர்களை எழுத்துப்பெயர்ச்சி மட்டும் செய்வதால் ஆங்கிலக் கலைநூல்களையும் ஆராய்ச்சி இதழ்களையும் அவர்கள் படிப்பது எளிதாக அமையும். அறிவுத்தரம் குறையுமோ என்ற அச்சமும் அகன்றுவிடும்.

பெரும்பான்மையான கலைச் சொற்கள் கடந்த நூற்றைம்பது ஆண்டு விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையில் விஞ்ஞானத்திற்காகவே எழுந்தன. அவற்றை நம் மொழியில் பெயர்த்தே எழுதினலும் விஞ்ஞான உலகின் வாயிலில் நுழைவோருக்குப் பிற மொழிச் சொற்கள் போலவே புதியவாகத்தான் தோன்றும். Flourine, Chlorine, Bromine, Iodine இவற்றினை 'வுளோரின்' 'குளோரின்' 'புரோமின்' 'அயடின்' என எழுத்துப் பெயர்ச்சி செய்வதைத் தவிர்த்து, 'வாரியம்', 'பாசிகம்', 'சோரிகம்', 'ஊதிகம்', என மொழிபெயர்ப்பதால் தெளிவு ஏற்படப் போவதில்லை. 'குளோரின்' என்ற சொல்லையே ஏற்பதால் அதனின்றும் தர்க்க ரீதியாகப் பெறப்படும் 'குளோரைடு', 'குளோரைட்', 'குளோரேட்', 'பெர்க்குளோரேட்', என்ற சொற்களுக்குப் 'பாசிகை', 'பாசிதை,' 'பாசிசை', 'பாசிகதை' என்றெல்லாம் மொழி பெயர்ப்புக்களை ஏற்று அல்லற்பட வேண்டாம். மேலும் எந்த மொழி பெயர்ப்பிலும் பல பிறமொழிச் சொற்கள் நிலைத்து வழங்குதலைத் தவிர்க்க முடியாது. விஞ்ஞானிகளின் பெயர்களால் வழங்கப்படும் "ஆம்பியர்", "வோல்ட்" "ஓம்", "காஸ்", "ஆங்க்ஸ்ட்ராங்", "வாட்" போன்ற அளவீட்டுச் சொற்களும், Π, M, P, K, P, J, °C, °F, g, e.m.f. போன்ற குறியீட்டு எழுத்துக்களும் அவ்வாறே தொடர்ந்து எழுதப்பெற்றுவரும். 'மெட்ரிக்' முறையினையும் 'கிராம்', 'மீட்டர்', 'கிலோகிராம்', 'கிலோமீடர்' போன்ற சொற்களையும் நம் நாட்டு வழக்கிற் கொணரப் பாராளுமன்றம் முடிவு செய்திருக்கிறது என்பதை நாம் நினைவிலிறுத்த வேண்டும். எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்தாலும், கலைச்சொன்மொழிபெயர்த்தலைத் தவிர்த்து எழுத்துப்பெயர்த்தலே உகந்ததாகும். ஆங்கிலமொழிப் போதனை தொடர்ந்து வளர வேண்டும்; ஆனல், ஆங்கிலமொழி மூலமாகப் போதிப்பதைத் தவிர்க்க வேண்டும். கலைச் சொற்றொகுதியளவில் மொழி பெயர்த்தலை நீக்கி, உலகப் பொதுச் சொற்களை அவ்வாறே நம்மொழிகளில் எழுதி உபயோகிக்கவேண்டும். இன்று நிலவும் மொழிப் பிரச்னையைப் போக்கி விஞ்ஞானக் கலைதனை நாட்டில் வளர்ப்பதற்கு ஈதொன்றே ஏற்ற முறையாகும்.

கல்லூரிகளில் பாடங் கற்கும் வாயிலாக ஆங்கிலம் இனி நீடிக்க வேண்டுமா?

அ. சங்கரவள்ளிநாயகம், பி. ஏ. (பி. டி. மாணவன்)

[சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் நடத்தப் பெற்ற பேச்சுப் போட்டியில், மதுரை மாவட்டத்திற் சிறந்தவற்றுள் ஒன்றெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது.]

தமிழன்னை ஈன்றெடுத்த தவச் செல்வர்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கம். கல்லூரிகளில் ஆங்கிலம் பாடங்கற்கும் வாயிலாக நீடிக்க வேண்டுமா அல்லது நீடிக்கக் கூடாதா என்பது தான் இன்று ஆராய்ச்சிக்கு எழுந்த பொருள். கல்லூரிகளில் கற்பிக்கும் மொழியாக ஆங்கிலம் நீடிக்கக் கூடாது; தாய் மொழி மூலம் பாடங்கள் கற்பிக்கப்படவேண்டும் என்ற கூற்றை எல்லோரும் ஏற்றுக்கொண்டு போற்றுவர். ஏனெனில் முற்றும் கற்றறிந்த நற்றமிழ் அறிஞர்கள் அத்தேவையை உணர்ந்ததோடு அதற்குரிய ஆக்கவேலைக்கு ஆவன ஆற்றியும் வருகின்றனர். ஆனால் மாற்று மொழிக்குச் சிறப்புச் செய்கிறவர்கள் வேற்று மொழிதான் வீற்றிருக்க வேண்டுமென்று சாற்றுகிறார்கள். அறிந்துதான் அங்ஙனம் கூறுகின்றனரோ? அன்றி விடுதலைக் கீதம் பாடிய பின்பும் அடிமை மோகந்தான் அங்ஙனம் கூறத் தூண்டுகிறதோ? யாமொன்றுமறியோம்.

ஒரு சேய் நோய் நொடி ஏதுமின்றி வளரத் தாய்ப்பால் அவசியம் என்று கூறினால் யாரும் புதுமை எனப் புகலார். நாட்டில் நடப்பதுதானே — நடைமுறையில் உள்ளதுதானே என்றுதான் நவிலுவர். அதுபோல் ஒரு நாடு நனிநலமுடன் இலங்க, அந்நாட்டு மக்கள் மகிழ்சிறந்து, மாண்புடன் விளங்க, அந்நாட்டில் வழங்கும் மொழியும் துலக்கம் பெறுதல் அவசியம். ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டு இலக்கியங்களைப் படித்தால் நன்கு விளங்கும் என்பது அறிஞர் கண்ட உண்மை. ஆதலால் மொழி ஒரு நாட்டின் முதுகெலும்பு. அம்மொழி வளரும் பற்பல துறைகளில் கல்லூரியும் ஒன்றாகும்.

சூழ்நிலை ஒருவன் கல்வி நிலையைப் பாதிக்கிறது. அதனை மனத்திற்கொண்டே அவன் கல்வித் திட்டமும் அமையவேண்டுமென்பது உளநூல் அறிஞர்களின் உள்ளக் கிடக்கையாகும். அங்ஙனம் நம் கல்லூரி மாணவர்களின் சூழ்நிலையையும் சுற்றுப்புறத்தையும் சற்று உற்றுப்பார்க்கின் அவர்கள் இளமையிலிருந்தே தாய்மொழியாம் தமிழையே பேசி வருகின்றனர் என்று அறியலாம். அன்னை தந்த பால் ஒழுகும் குழந்தையின் வாய் தேன் ஒழுக 'அம்மா'

என்று சொன்னதுவும் தமிழன்றோ! அக் குழந்தைச் செவியினிலே தோய்ந்ததான பொன்மொழியும் தமிழன்றோ! புதிது புதிதாகக் கண்ட பொருளினெடு மின்னியதும் அம்மொழியன்றோ! விளையாட்டுக் கிளிப்பேச்சும் அம்மொழியாம் செம்மொழியிலன்றோ! பின்பு அவர்கள் ஆரம்பப்பள்ளியிலும் உயர்நிலைப்பள்ளியிலும் தங்கள் பாடங்களைத் தன்னேரிலாக் கன்னல் நிகர் தமிழிற் கற்கின்றனர். உயர்நிலை வகுப்புக்களை முடித்தவுடன் கல்லூரிகளிற் கட்டிளம் காளையர் காலை எடுத்து வைக்கின்றனர். அங்கே ஒரு மாற்றம்; இது அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம். பாடத்திட்டத்திலே, அவைகளைப் புகுத்தும் முறையிலே ஒரு மாறுதல் எழுகிறது. இதுவரை பழக்கத்தில் இல்லாத, புரியாத, புதிதான ஆங்கில மொழியிற் பாடங்களைக் கற்கின்றனர்.

இரு மொழி கற்பதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது என்று சிலர் கூறுவர். கல்லூரிகளிற் பயிலும் மாணவர்களில் எத்துணை பேர்?—ஏன்? படித்துப் பட்டம் பெற்றவர்களில் எத்துணைபேர் தாய்மொழியில் தட்டுத்தடங்கலின்றித் தவறு ஏதுமின்றிப் பேசுவது போல ஆங்கிலத்திற் பேசுகின்றனர்? தமிழும் தகராறு; ஆங்கிலமும் அரைகுறை என்ற நிலையொன்றே கல்லூரிகளில் நிலவி வருகிறது. ஆதலால் இரு மொழிகளிலும் பயிற்சியும் வளர்ச்சியும் பெருமாணவர்கள் முயற்சியற்று, தளர்ச்சியுற்று, அயர்ச்சியே அடைவர்.

இனி, ஆங்கிலம் உயர்ந்த மொழி, உலக மொழி, வாணிபத்தை வளர்க்கக் கிடைத்த வகையான மொழி என்றெல்லாம் சிலர் ஆங்கிலத்தின் அருமை பெருமைகளை அளவின்றி அள்ளிக் கொட்டுவர்; தேன் சொட்ட, நாவினிக்க நவிலுவர். ஆங்கிலம் உலகமொழி என்பதற்காக அது உயர்ந்த இடத்தில் இருக்கவேண்டும் என்று வாதிடலாமா? தன் வீட்டுத்தோட்டத்தில் ரோசா மலர் பூத்துப் பொலிவு தந்துகொண்டிருக்க, மாற்றான் வீட்டுத் தோட்டத்தின் மணம் வீசும் மல்லிகை மலரைப் பறிப்பதுபோல், பலகாலும், பல நாளும் பரிவோடு சுற்றி, உலகோரின் சொல்லை உறவோடு கற்று, விலகாத நட்பிற்கு வெகு கெட்டி வேராய்த் தலையாய அறிவான தமிழ் காத்துக்கொண்டிருக்க, அதை விடுத்து ஆங்கிலந்தனை நாடுகின்றனரே! ஆங்கிலம் அறவே வேண்டாம் என்று அகற்றவில்லை. கல்லூரிகளிற் பாடங்களில் ஒன்றாக இதையும் வைத்துக்கொள்ளலாமே!

தமிழுக்குத் தகுதி இல்லை என்று தமிழின் மாண்பு அறியாதவர் கூறுவர். மொழிகளிற் சாலப் பழமை வாய்ந்தது தமிழ் என்பதில்

யார்க்கும் ஐயமில்லை. இலக்கிய வளம், இலக்கண வரம்பு, சொல்லின் செல்வம் அத்துணையும் தமிழிற் பொதிந்து கிடக்கின்றன. மொழிக ளெலாம் பசையற நாணிக்கூசிக் குறைபடச் செய்யும் வாசத் தமிழை, வரையிலாத் தொன்மை மணந் வீசும் தமிழை, விரிந்த கடலை, தேனினும் பாகினும் ஏ னி னு ம் எதெனினும் இனித் திடும் தமிழை, தின்னத்தின்னத் தெவிட்டாத் தமிழை, பன்னப் பன்னப் பல்கிடும் தமிழை, குடிக்கக் குடிக்கக் குறையா அமுதைப் படிக்கப் படிக்கப் பயனே தரும் "என்னுடைத் தமிழை என் தாய் மொழியை, உன்னுடைத் தமிழை உன் தாய் மொழியை, உம்மையும் எம்மையும் மற்று மிங்கெவரையும் செம்மையாய் நம்மிடைச் சிறு பிராயத்தில் தொட்டிலில் இட்டுக் கட்டிலில் வைத்துத் தோளிலும் மார்பிலும் தூக்கித்திரிந்து, பாலூட்டி வளர்த்த பாவையாம் தமிழைத் தாலாட்டி வளர்த்த தாயாம் தமிழைப் பாராட்டி வளர்த்த பழைய தோர் மொழியைச் சீராட்டி வளர்த்த சீர்பெறு மொழியை" கை விட்டு ஆங்கிலந்தனை நாடுகின்றனரே! இதைவிட பேதைமை எங்கும் கண்டிலோம்.

கலைச் சொற்கள் தமிழில் இல்லை என்ற கருத்தைக் கூறித் தமிழுக்கு இழுக்கை சிலர் விளைப்பர். "கலைகள் நிறைந்த தமிழ் வாழ்க" என்ற கானம் நம் காதிற்படும்பொழுது களிப்படைகிறோம். அதேநேரத்தில் கலைச்சொற்கள் காணப்படவில்லை என்று கவலு கிறோம். இரங்கத்தக்க நிலை. இந்த நேரத்தில் என்னெஞ்சில் ஒரு கூற்று இடம்பெறுகிறது. கேட்டிடுக!

"வெளியினிலே சொல் வதெனில்
உம் நிலைமை வெட்கக் கேடன் றோநீவிர்
கிளி போலச் சொல் வதன்றித் தமிழ்
நூல்கள் ஆராய்ந்து கிழித்திட்டீரோ?"
புளி என்றால் புலி என்று உச்சரிக்கும்
புலியீரே! புளுக வேண்டாம்
துளியறிவும் தமிழ் மொழியில் உள்ளதுவோ?"

அகநானூற்றிலே ஓர் ஆராய்ச்சி, புறநானூற்றிலே ஒரு புரட்டு, சிலப்பதிகாரத்திலே சிறிது சிந்தனை, கலிங்கத்துப் பரணியிலே சிறிது கவனம் செலுத்தினால் பல்லாயிரம் கலைச்சொற்கள் அகப் படும். பிறமொழிகளில் வழங்கும் சொற்கள் தமிழ்ச் சொற்களின் ஓசையினையும் உருவத்தினையும் கொண்டிருந்தால் அ ங் ங ன மே ஏற்றுக்கொள்ளலாம் என்றுதான் தமிழிலக்கணம் வரையறை செய் திருக்கிறது.

(ராஜன்—அரசன். ரூபம்—உருவம்)

இறுதியாக மொழி பெயர்க்க அதிகச் செலவு ஆகுமே என்ற பொருத்தமற்ற கருத்தைச் சிலர் கூறுவர். எந்த நல்ல காரியத்தை யும் முடிக்க வேண்டுமெனில் அல்லலைக் கடக்கவேண்டும் என்பது பிறர் சொல்லாமலே எல்லோரும் அறிந்த உண்மையாகும். செலவு ஆகும் என்பதற்காக ஒரு செம்மையான பணியை விடவேண்டும் என்று விவாதிப்பது விவேகமானதன்று.

"கணித வளர்ச்சியில் ஹிந்துக்களின் பங்கு"

ே. ந. தேவதாஸ், பி. ஏ. (பி. டி. மாணவன்)

இயற்கணிதத்தின் (Algebra) வளர்ச்சியால் இன்று விஞ் ஞானம் முன்னேற்றமடைந்திருக்கிறது. இதனுற்ருன் மிக மிகச் சிறிய அளவையும் விஞ்ஞானிகள் கணக்கிட்டு, உலகம் வியக்கும் வண்ணம் பல அரிய சாதனங்களைப் படைத்து வருகிருர்கள். கணிதத்தின் வளர்ச்சி விஞ்ஞானத்தின் வளர்ச்சியாக மாறி மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பயன்பட்டு வருகிறது. இவ்வித முன்னேற்றத்திற்கு ஹிந்துக்கள்—அதாவது நம் நாட்ட வர்கள் காரணமாய் அமைந்திருந்தார்கள் என்று கூறினல், ஒரு வேளை நமக்கே அது வியப்பைத்தரலாம். ஆனல் நாம் வியப்படை யத் தேவையில்லை.

கணித வளர்ச்சியின் முன்னேற்றத்திற்கு ஹிந்துக்கள் எவ் விதம் காரணமாய் அமைந்தார்கள் என்பதை அறியுமுன், அவர்களது கண்டுபிடிப்புக்களுக்கு முன்னர்க் கணித வளர்ச்சி எப்படித் தடைப் பட்டிருந்தது என்பதை ஆராய்வோம்.

ஜீனே (zeno) என்ற கணித வல்லுநன் ஒரு முறை தன் குழு வினரை அழைத்து, கீழ்க்கண்ட கணக்கை அவர் ஆராய்ச்சிக்கு விட்டான்.

"அகிலிஸ் (Achilles) என்ற கிரேக்க வீரனுக்கும், ஆமை யொன்றுக்கும் ஒரு முறை ஓட்டப்பந்தயம் நடந்தது. ஆமைக்கு முன் 100 கஜ தூரத்தில் அகிலிஸ் நிற்கிருன். ஓட்டப்பந்தயத்தின் தொடக்கமான முதல் ஓட்டத்தில் அகிலிஸ் 100 கஜ தூரம் ஓட, ஆமை அதே நேரத்தில் 10 கஜம் முன்னேறி விட்டது. 2-வது ஓட்டத்தில் அகிலிஸ் 10 கஜ தூரம் ஓட, ஆமை 1 கஜம் ஓடுகிறது. மூன்ருவது ஓட்டத்தில் அகிலிஸ் 1 கஜ தூரம் ஓட, ஆமை $\frac{1}{10}$ கஜம் ஓடுகிறது. பந்தயம் இதோடு நிற்கவில்லை. இவ்விதமாக ஓடிக் கொண்டேயிருந்தால் அகிலிஸ் ஆமையை எப்போது பிடிப்பான்?"

விடையை அக்கணித வல்லுநர்கள் அறுதியிட்டுக் கூறமுடிய வில்லை. தற்பொழுது நடைமுறையில் வழங்கிவரும் 1, 2, 3 ......10, 100, 1000, 10000 .... என்ற எண்களுக்கு ஏற்ப அக்கணித வல்லுநர் கள், எழுத்துக்களால் ஆமை கடந்த மொத்த தூரத்தைக் குறிப்பிட் டார்கள் எனத் தெரியவருகிறது.

இவை எப்பொருளையும் விளக்காமல் குழப்பியதாலும், கூட்டுத்தொகை கண்டுபிடிப்பதில் மிகவும் சிரமமடைந்ததாலும் ஜினோவின் கணக்கிற்கு விடை அக்கணித வல்லுநர்கள் காண்பதில் மாறுபட்ட கருத்துடையராயினர்.

ரோமானியர்கள் 1, 2, 3 .... 9, 10 என்னும் எண்களுக்குப் பதிலாக 1, 11, 111 .... 1×, × என்று குறித்து வந்தார்கள். 32 என்பதற்கு (111) (11) என்று எழுதியிருந்தால், அதே எண் 320, 3002, 3020 .... என்ற மதிப்புடை எண்களைக் காட்டும். இதனால் '0' என்ற எண்ணோ அல்லது அதன் பொருளுடைய வேறு ஒரு எழுத் தோ இன்றி அவர்கள் 9,99,999,9999 போன்ற எண்களைக் குறிக்க மிக்க இன்னலடைந்திருப்பார்கள் என்பது உண்மை.

அமெரிக்கர்களும், எகிப்தியர்களும், பாபிலோனியர்களும், சீனர்களும் எண்களைக் குறித்துக்கொண்டு கணித வளர்ச்சியின் முன் னேற்றத்திற்கான கருவூலங்களைக் கண்டுபிடிக்காமலிருந்தனர்.

இந்நேரத்தில்தான், ஹிந்துக்கள் தங்கள் நுட்பமான அறிவுத் திறனை உபயோகப்படுத்தித் தெளிந்த, விளக்கியாகிய (Self-evident) எளிதான 10 கணித எண்களைக் கண்டுபிடித்தனர். அவ் எண்கள் தாம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0 என்பன.

இந்த ஆராய்ச்சியின் பயனை உணர்ந்த கணித உலகம் ஹிந்து கணித வல்லுநர்களை இன்றளவும் போற்றிப் புகழுகிறது. லாப்லஸ் (Laplace) என்ற கணித வல்லுநர், "It is India that gave us the ingenious method of expressing all numbers by means of ten symbols, each symbol receiving a value of position, as well as an absolute value; .... and we shall appreciate the grandeur of this achievement when we remember that it escaped the genius of Archimedes and Apollonius, two of the greatest men produced by antiquity" என்றும், கலிபோர்னியோ சர்வகலாசாலைக் கணித வரலாற்றுப் பேராசிரியர், கஜோரி (Cajori) "The greatest achievement of the Hindus and the one which, of all mathematical inventions, has contributed most to the

progress of intelligence, is the perfecting of the so-called "Arabic Notation". That this notation did not originate with the Arabs is now admitted by everyone" என்றும் போற்றிக் கூறுவர்.

இவ்வெண்களில் '0' என்ற எண்தான் கணிதத்துறையிற் பெரும் புரட்சியை விளைத்தது. ஹிந்து எண்களின்படி ஆமை ஓடிய மொத்த தூரம் $10+1+\frac{1}{10}+\frac{1}{100}+\frac{1}{1000}+$........ '0' என்ற எண் 1 என்ற எண்ணோடு சேர்ந்து வன்மைபெற்று 10 ஆக மாறுகிறது. இந்த '10' என்ற எண், கணித வல்லுநர்களின் அறிவுக் களஞ்சியங் களிலே அகப்பட்டுத்'தசாம்ச முறை'யைக் கண்டுபிடிக்க உதவிற்று. இம்முறையால் ஆமை ஓடிய தூரம் $10+1+\cdot1+\cdot01+\cdot001$ என்று குறிக்கப்பட்டு, அதுவே 11·11111.... +........பின்னர் 11·1 என்று சுருங்கிய, ஆனால் விரிந்தபொருள் தருங்கணித மொழியாக மாறிற்று. இந்தப் புரட்சிக்குக் காரணம் '0' என்ற எண்தான்!

'0' என்ற எண்ணைக் கருவியாக வைத்துக்கொண்டு ஹிந்து கணித வல்லுநர்கள் ஆராய்ச்சிகள் பல செய்து அங்க கணிதம் (Arithmetic), சமகரணங்களைத் தீர்க்கும் வகை (Solution of equations), தொடர் எண்கள் (Study of series) ஆகியவைகளைப் பற்றிப் பலப்பல எழுதியிருக்கிறார்கள்.

ஆரியபட்டர், பிரமகுப்தர் போன்றோர் அங்க கணிதத்தின் மூன்று அடைப்படையான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவை $a\times o=o$, $a+o=a$, $a-o=a$ என்பன. $a\div o$ என்ன என்பதை அவர்கள் கூறாது விடுத்தபோதிலும் அதைப்பற்றிய ஞானம் இருந்தது என்பது '0' வைப்பற்றிப் பாஸ்கரர் தரும் பின் வரும் ரசமான கருத்து அறிதற்குரியது. '0'-ஐ வகுக்கும் எண்ணாகக் கொண்ட எந்தப் பின்னத்துடனும் எவ்வளவு கூட்டினாலும், கழித் தாலும் அதன் மதிப்பு மாறாது. இது உண்மைதானே ? முடிவிலி (Infinity) யுடன் எதைக்கூட்டினாலும், கழித்தாலும் மதிப்பு முடிவிலி யாகத்தானே இருக்கும்!

ஹிந்துக்களின் பெருக்கல், கூட்டல், கழித்தன் முறைகள் தற்பொழுது நடைமுறையில் இருந்து வரும் முறைகளிலிருந்து வேறுபட்டவை. 254-உடன் 663-ஐக் கூட்டவேண்டுமாகில் $2+6=8$; $5+6=11$ (இந்த 11-லிலுள்ள இடப்பக்க 1, 8 உடன் சேர்ந்து அதை 9 ஆக்குகிறது). $4+3=7$; ஆகவே மொத்தம் 917. 821-லிருந்து 348-ஐக் கழிக்க, ஹிந்துக்கள் 11 லிருந்து 8 ஐக் கழித்து 3, 11 லிருந்து 4 ஐக் கழித்து 7, 7 லிருந்து 3 ஐக் கழித்து 4 என்ற

முறையை உபயோகித்து 473 என்று எழுதினர். 569-ஐ 5 ஆல் பெருக்க $5 \times 5 = 25$; $5 \times 6 = 30$ (30-ல் இருக்கும் 3, 25 லுள்ள5-உடன் சேர்ந்து அதை 28 ஆக்குகிறது); $5 \times 9 = 45$ (0-உடன் 4-சேர 4 ஆகிறது.) ஆகவே பெருக்குத் தொகை 2845. இம்முறைகள் பின்னால் மாற்றப்பட்ட போதிலும் இவைகளே அடிப்படையாய் அமைந்தன என்பதை நாம் மறத்தற்கோ அன்றி மறுத்தற்கோ இல்லை.

இயற்கணிதத்தின் முக்கிய உறுப்புக்களாகிய '+', '−' என்ற குறிகளின் உண்மைப்பொருளைப் பணத்தை வைத்துக்கொண்டிருத்தலுக்கும் (Possession) கடன்பட்டிருத்தலுக்கும் (Debts) சம்பந்தப்படுத்தி, முற்றிலும் உணர்ந்து, உணரச் செய்தவர்கள் ஹிந்துக்களே என்பதைப் பேராசிரியர் கஜோரி தம் நீண்ட ஆராய்ச்சியிற் குறிப்பிடுகிறார்.

வர்க்க மூலத்தைக் (Square root) குறிக்கும் $\sqrt{\ }$ என்ற குறியைக் கண்டுபிடித்தவர்கள் ஹிந்துக்களே. குறியைக் கண்டுபிடித்தார்கள் எனின் வர்க்கமூலத்தைத் தீர்க்கும் வகையைக் கண்டுபிடித்தார்கள் என்பதே பொருள். ஈரடுக்குச் சமன்பாட்டைப் (Quadratic Equation) பற்றி டயோபாண்டஸ் (Diophantus) என்ற கணித வல்லுநனைவிட ஹிந்துக்கள் அதிகமாகவே அறிந்திருந்தனர். ஈரடுக்குச் சமன்பாட்டிற்கு இரண்டே இரண்டு மூலங்கள் (Roots) தாம் உண்டு என்பதைக் கூறியவர் பாஸ்கரர். இந்த ஒரு கண்டுபிடிப்பு இயற்கணித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிபுரிந்திருக்கிறது என்பதை நாம் இன்று காண்கிறோம்.

கிரேக்கரின் சிறப்பைவிடத் தம் சிறப்பு மிகுமாறு பாஸ்கரர் என்பவர் கீழ்க்கண்டவிதமாய் வர்க்க மூலத்தின் தன்மையை விளக்குகிறார்.

"ஒரு பாசிடிவ் (Positive) எண்ணிற்கும், நெகடிவ் (Nagative) எண்ணிற்கும் வர்க்கம் (Square) 'பாசிடிவ்' ஆகவே இருக்கும். பாஸிடிவ் எண்ணின் வர்க்கமூலம் (Square root) இரண்டு; ஒன்று நெகடிவ், மற்றொன்று பாசிடிவ். நெகடிவ் எண்ணிற்கு வர்க்க மூலமே கிடையாது. ஏனெனில் அது ஈரடுக்கு எண் (Square) அன்று."

மேற்கூறிய நெகடிவ் எண்ணிற்கு வர்க்கமூலம் இல்லை என்பதை மறுத்து, அதற்கு மிரு வர்க்கமூலங்கள் உண்டு என்பதை இதுபோழ்து கணித வல்லுநர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தக் கண்டுபிடிப்பிற்கு அடிப்படையாய் அமைந்தது பாஸ்கரரின் மேற்கூறப்பட்ட கருத்தேயாகும்.

க்ஷேத்திர கணிதம் (Geometry), வானிலைக் கணிதம் (Astronomy), திரிகோணமிதி (Trigonometry) முதலிய கணிதவகைகளிற் பலப்பல கருத்துக்களை நம் கணித வல்லுநர்கள் அளித்தனர். வானிலைக்கணிதத்தில் அவர் ஞானம் மிக உச்ச நிலையில் இருந்தது.

ஹிந்து கணித வல்லுநர்களின் கண்டுபிடிப்புக்களைப் பற்றியும், அவர் வாழ்க்கை வரலாறுகளைப் பற்றியும் அறியத் தகுந்த புத்தகங்கள் ஒரு சிலவே நமக்குக் கிடைக்கின்றன. இக்கட்டுரை ஹிந்துக்கள் கணித அறிவில் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருந்தார்கள், கணிதத்தின் எவ்வெத்துறைகளில் அவர்களது கணித அறிவு வளம்பெற்றிருந்தது என்பதை விளக்கற்கே. அவர்களைப் பற்றி அதிகமாய் அறிவதற்குத் தூண்டுகோல்போல் இக்கட்டுரை இருக்கவேண்டுமென்பதே இதன் குறிக்கோளாகும்.

---

* மார்க்க அரேலியர் ஆத்ம சிந்தனை

கே. ராமச்சந்திரன், பி. ஏ. (பி. டி. மாணவன்)

எனக்குள்ளது ஒரு உடலும் ஒரு மனமும்!

மிகப்பெருஞ் செல்வனாயினும் சரி! எளிமை வாய்ந்தவறியனாயினுஞ் சரி! அவனது உடைமை, பிறரால் உரிமை பாராட்ட முடியாத உடைமை, ஒரு உடலும், உலக அறிவினால் வளம் பெற்ற ஒரு மனமுந்தான்! உலக வாழ்வின் அடிப்படை உடலும் உள்ளமுமே. உடல் நிலையற்றது. கணந்தொறும் மாறுவது. உள்ளமோ நிலைபெற்றது. மாறாத நிலையது. ஆதலால் உள்ளத்தை வளம்படச்செய்தால், உடலும் வளம் பெறும். வாழ்க்கை செம்மையுறும். உள்ளத்தைத் திருத்துவதே மனிதனின் தலையாய கடமை. அறிஞர்தம் பணியும் அஃதே. வாழ்வின் சகல தத்துவங்களும் இதையே உணர்த்துகின்றன.

வாழ்க்கையைப் பற்றிப் புதிய தத்துவங்களை உணர்த்தும் ஞானிகளைக் கொண்டே உலகம் உய்ய முடியும். உலகம் அவ்வுயர்ந்தோர் மாட்டே அமைகின்றது. ஆயினும் வாழ்க்கையைப் பற்றிய எல்லாத் தத்துவமும் எக்காலத்திற்கும் பொருந்த உணர்த்திய ஞானிகள் யாரும் இல்லை. அரிஸ்டாட்டிலின் கொள்கைகளைப் பிற்கால அறிஞர் பலர் மறுத்துள்ளதே இதற்குச் சான்றாகும். கால தேசச் சூழ்நிலைகளுக்கேற்ப அவர்தம் எண்ணங்கள் உருவாகி மாறுபடுகின்றன. எல்லா ஞானிகளும் வாழ்க்கையின் ஏதாவதொரு

---

* An article that secured a certificate of merit in an essay Competition at which Sri N. D. Sundaravadivelu, our Director of Public Instruction, presided.

பகுதியைப் பற்றித் தத்துவங்களை உலகுக்கு அளித்திருக்கிறார்கள். என்றுமாறாத உலக முழுமுதல் தத்துவம் பற்றிப் பெர்னார்ட்ஷாவின் "மெதுசலாவை நோக்கிச்" சென்ற ஞானி இன்னும் 31920 வருடங்களுக்குப் பின்னால் அறிந்து சொல்லலாம். ஏனென்றால் அந்த வருங்கால ஞானிக்கு மரணம் என்பதே இல்லை. ஆனால் துன்பத்திற்கும், மரணத்திற்கும் ஆளாகிற மனித இனம், அது அடைந்துள்ள அறிவின் எல்லையைக் கொண்டு வாழ்க்கைத் தத்துவத்தின் பூரணத்துவத்தைக் காணுமுன்பே மரணங் கண்டுவிடுகிறது.

வாழ்க்கை என்பது என்ன? உலகின் இயல்பு யாது? எனக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு என்ன? எனக்கும், எனக்கு விளங்காத மாபெரும் ஒருதலைமைச் சக்திக்கும் உள்ள தொடர்பு என்ன? அத்தொடர்பு ஏன்? என்பன போன்ற பௌதிக அறிவிற்கு மேம்பட்ட கேள்விகளுக்குப் பற்பல அறிஞர் தம்வாழ்நாள் முழுதும் தியாகம் செய்து விடைகள் கண்டுள்ளனர். அவர்தம் விடைகளைப் பூரணமான வாழ்வின் தத்துவமென்றோ, தனி மனிதனுடைய உள்ளத்தைத் திருத்திச் செம்மையுறச் செய்யுமென்றோ கூற இயலாதாயினும் அவ்விடைகளின் ஊடே அனைத்தையும் இணைத்து ஒரு சிறந்த உண்மை ஊடுருவிச் செல்கிறது. அந்தச் சூத்திரம் போன்ற உண்மைத் தத்துவத்தின் விளக்கந்தான் மார்க்க அரேலியரின் "ஆத்ம சிந்தனை".

மார்க்க அரேலியரின் உபதேசங்கள் பல ஞானிகளைப் படைத்து உலகுக்கு அளித்துள்ளன. ரோமிலிருந்துகொண்டு இலத்தீன் மொழியிலேயே இதய வீணையிலே மீட்டிய தத்துவ கீதமானது உலகெங்கும் பரவி எதிரொலித்து, டால்ஸ்டாய், ரூஸோ, வால்டேர், மஹாகவி தாந்தே, ஜெர்மன் கவிஞர் கதே போன்ற உலக மேதைகளை உருவாக்கியது.

இன்று மனித இனத்திற்கு ஆத்ம சிந்தனை என்னும் அமுதசுரபி யாது கொடுக்க வல்லது? வாழ்வின் பிரச்னைகள் நிகழ்காலத்தைப்பற்றியவாகலின் நிகழ்கால வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஆத்ம சிந்தனை உதவுமா? இந்த முக்கியமான கேள்விக்கு விடை இதோ! ஆத்ம சிந்தனையிலுள்ள உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் உபதேசங்களும், வாழ்வின் தத்துவங்களும் நிச்சயமாக உதவும்.

மனிதசமூகந் தன்னைக் கொத்தவரும் பாம்பைக்கண்டு புன்முறுவல் செய்யும் குழந்தையைப் போல அணுக்குண்டுகளின் பயங்கர நிழலிலே நடமாடிக் கொண்டிருக்கிறது. தனி மனிதனின் வாழ்க்கையோ, பசி, நோய்களின் துன்பம், ஒரு கவளச்சோறு, ஒரு நொடிச் சிரிப்பு எனும்படி அமைந்துள்ளது. நிம்மதியற்ற

அலைச்சல், செயற்கைச் சூழ்நிலை, பணத்தின் அதிகாரக் கூச்சல், இவையே வாழ்வின் தலைமை! இவற்றினின்றும் நாம் எப்படி உய்வது? மரணம் ஒன்றுதானா வழி? அல்லது நிம்மதியற்ற துன்பந்தானா முடிவு? நாம் சகித்துக்கொண்டு அனுபவித்துத்தான் ஆக வேண்டும் என்று ஆத்மசிந்தனை அறிவுறுத்துகிறது. உலகத்தின் தன்மைக்கே எல்லாம் நடக்கின்றன. உலகத்தின் ஒரு பாகமாகிய நீ, உலகிற்காக நடக்கும் எதையும் துக்கமாக எண்ணக் கூடாது. உலக அமைப்பைக் காப்பதற்கு வேண்டியதும், உலக அமைப்பில் இயல்பாய் நிகழ்வதுமான ஒரு நிகழ்ச்சியை அந்த அமைப்பில் ஒரு சிறு பகுதியான நீ, நன்மை என்றே கருதவேண்டும். அடைந்த சுகங்களைப் பற்றித் தெய்வத்தின்பால் நன்றியுள்ளவனாய்ப் பட்ட துன்பங்கள் எல்லாம் உலக அமைப்பில் இன்றியமையா நிகழ்ச்சிகள் என்று உணர்ந்து சாந்த சிரத்தையுடன் வாழவேண்டும். இந்த அறவுரைகளை மார்க்க அரேலியர் அடிக்கடி கூறுகிறார். இப் பொன்னுரைகளே இன்று தனிமனிதன் சாந்தி பெறப் பெரிதும் உதவுவன.

மனிதன் கூட்டுவாழ்க்கை மேற்கொள்பவன். சமுதாயத்தின் அங்கமான மனிதன், சமுதாயத்தின்பொருட்டு இன்னல்கள் நேரினும் பொறுத்துக்கொண்டு தன்னலத்தைத் தியாகஞ் செய்யவேண்டும். இதில் நம் சுதந்தரமும் அடங்கியிருக்கிறது. சுயநலமே உருவான தற்கால மனிதனுக்கு இம்மொழிகள் சிறந்த தேவ வாக்காகும். மானிடர் எல்லோரும் ஒரு குடும்பம். அவர்கள் உறவு, மிக நெருங்கிய உறவாகும். அவ்வுறவு உடற் சம்பந்தமன்று. உயிருக்கு உயிருடன் சம்பந்தப்பட்ட தெய்வ அம்சம். ஒரு தனி மனிதனுடையது என்பது ஒன்றுமே இல்லை. ஒருவன் உடல், மக்கள், சுற்றம் அனைத்தும் கடவுளின் பொருள்களே. இவ்வாறு மார்க்க அரேலியர் சமுதாயத்திற்கும், தனிமனிதனுக்கும் உள்ள தொடர்பைக் காட்டி, தனிமனிதன் உலக ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டுத் துன்பங்களை அனுபவித்துப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று தெளிவாகக் கூறி ஒருவாறு நம் துன்பந் துடைக்கிறார்.

ஆனால் உலக ஒழுங்கு என்னும் பொய்த்திரை போட்டு, ஒரு சிலர் இன்புறவும், மற்றும் பலர் அடிமைகள் போல உழைத்து வீணே துன்புறவும் அனுமதிப்பது முறையா? அநீதியால் வலிய வனாகி இன்புறுதலும், நல்லவர் அவனது தீய செயல்களாற் றுன்புறுதலும், உலக ஒழுங்குதானா? இந்தச் சிக்கலான, ஆனால் ஜீவாதாரமான கேள்விக்கு இந்நூல் என்ன விடையளிக்கும்?

இந்தச் சிக்கலான கேள்விக்குக் கம்பீரமாக, அழகாக இந்நூல் விடை கூறுகிறது. துன்பம் பிறரால் உண்டாக்கப்படுவ

தில்லை. புறப்பொருள் எதுவும் ஆத்மாவைத் துன்புறுத்த இயலாது. இந்த ஆத்மா அனைத்திலும் ஒன்றே. நம் எதிரிகூட உறவினன் தான். ஒரு சில லௌகீகத் தொடர்பால் எதிரியாகக் காணப்படினும், ஆத்மீக நோக்கில் உறவினன்தான். உன் உள்ளத்தை மற்றவர்கள் செய்யும் செயலைப்பற்றிய வருத்தமான எண்ணங்கள் அணுக ஒட்டாதே. அவர்களை வெறுக்காமல் அன்பே பாராட்டு. ஏனென்றால் நீயும் அவர்கள் நிலையில் இருந்தால் குற்றம் இழைக்கலாம். இங்கே கடைசியில் கூறும் இக் கூற்று நம்மை நாமே சோதித்துக் கொள்ளத் தூண்டுகிறது. சூழ்நிலையின் வலிமையே இன்ப துன்பங்களுக்குக் காரணமன்றி, உன் தோழரல்லர் என்று விளக்கி அன்பைப் போதிக்கிறார். மேலும் வெள்ளரிக்காய் கசந்தால் எறிந்துவிடு! வழியில் முள் இருந்தால் தள்ளி நட! ஆனால் முள்ளும் வெள்ளரியும் ஏன் இருக்கின்றது என்று கேட்டுப் பயனில்லை. உலகிலுள்ள கெட்ட தன்மைகளை உலகைத்தவிர வேறெங்கே போட இடம் இருக்கிறது? இதிலிருந்து நமக்குத் துன்பமூட்டும் பொருள்களிடத்திருந்தோ, அல்லது மனிதர்களிடத்திருந்தோ தூர விலகி, நின்று நமக்குத்துணையாகப் பேருண்மைகளை உள்ளத்தில் தயாராக வைத்துக்கொண்டு வாழ்வை நடத்துதல் நல்லது என்று கூறுகிறார்.

நோய்கூட ஆத்மாவை ஒன்றும் செய்ய இயலாது. மனத்தை வசப்படுத்தி நோயை விட்டுத் தனித்து நிற்கச் செய்தால் உடலுக்குத் தனி உணர்ச்சி இல்லை. அதையும் நோய் துன்புறுத்தாது. எல்லாவற்றிற்கும் உள்ளத்தின் நிலையே காரணம் என்று பல தடவை பலவிதமாக எடுத்துக் கூறுகிறார். காந்தீயத்தின் உயிர் நாடியான சத்தியமும் அஹிம்சையும் பிணைந்துள்ள ஒரு தத்துவமாக இப்பொன்மொழி தோன்றுகின்றது.

மனிதனுடைய எந்தச் செயலும் ஏதாவதொரு பலனை எதிர் பார்த்துத்தான் இருக்கும். பலனின்றிச்செய்யும் செயல் பித்தனுடைய செயலென்றே கருதப்படும். உலகில் தன்னலத் தியாகம் செய்து, இன்பதுன்பங்களைச் சகித்து நல்லவனாக இருக்கும்படி மார்க்க அரேலியரும் ஞானிகளும் கூறுகின்றார்களே? அதனால் பலனென்ன? நல்லவர்கள் என்ன பலன் அடைந்தார்கள்! நல்லதுதான் இன்பம் என்று முடிவுகட்டிய ஞானியாகிய ஸாக்ரடீஸ் நஞ்சுண்டல்லவா இறந்தான்? ஏசு அன்பில்லாமல் சிலுவையிலன்றோ அறையப்பட்டார்? காந்தியை ஒரு அற்பன் சுட்டுக்கொன்றானே? இப்படியெல்லாம் உலகில் நன்மை செய்தாலும் பலன் நன்றாக இருப்பதில்லை. மதிப்பு, சுகம், செல்வம், முதலியன நன்மை செய்பவருக்கு உண்டாவதில்லை. நன்மை

தகாதவர்களுக்கு உண்டாகிறதே! இப்படியிருந்தும் நாம் நன்மை செய்து நல்லவர்களாக இருக்கவேண்டியது அவசியந்தானு?

மனிதப்பிறப்புப் பெற்றதே பெரும் பாக்கியமாகும். ஆதலின் மனிதன் தன் மனிதத் தன்மையைக் கூடுமானவரை உயர்த்தி மேன்மையுறுவதே நியாயமாகும். அதனுல்தான் உணவு, உடை, இல்லம், செல்வம் என்னும் புறத்தேவைகளை விட அறிவு, புகழ், நேர்மை என்பன மனிதனை நல்லவனுக்குகின்றன. நல்லவராக, நாம் செய்யும் காரியங்கள் சிறந்த காரியங்களாக இருக்கவேண்டும். தருமமும், ஆடம்பரமுமற்ற பெருந்தன்மையும் பொருந்திய முறையிற் காரியத்தை முடிக்கவேண்டும். மற்ற உயிர்களுக்குத் தீங்கு ஏற்படாமல் மற்ற உயிர்களுடைய சுதந்தரத்திற்குக் குந்தகம் ஏற்படாமல் நியாயம் என்று மனச்சாட்சியிற் பட்டதைக் கடமையாகக்கொண்டு உலக விவகாரங்களைச்செய்! இவ்விதம் அழகாகச் சொல்வது எளிது! ஆனுல் சூழ்நிலையில் நம்போன்றவர்கள் எவ்விதம் செய்வது என்று ஐயுறலாம்.

ஒவ்வொரு மனிதனும் தன் ஆயுள் முடியுந் தருணத்தில் ஒரு சிறந்த காரியம் உலகிற்குச் செய்யவேண்டும் என்று நினைக்கிருன். உலகப் பேரறிஞரான வள்ளுவரும்,

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்று கூறுகிருர். நம் காரியம் எல்லோரும் போற்றுவதாயும், நல்லதாயும் இருக்க விரும்புகிறேம். ஆதலால் செயல் நல்லதாக அமைய ஒரு யோசனையை அரேலியர் கூறுகிருர். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் நம் ஆயுள் முடிந்துவிட்டது, இதுதான் நம் வாழ்வின் இறுதிச்செயல் எனப் பாவித்துச் செய்தால் அதுவே சுதந்திரம், நியாயம், அன்பு முதலியவற்றைப் புறக்கணிக்காத காரியத்திற்கு நல்ல தூண்டுகோலாகும். இன்னும் தெளிவாகக் கூறினுல், நாம் செய்யும் எக்காரியத்தையும் பயனைக் கருதாமல் நம் வாழ்வின் கடமையாகக்கொண்டு செய்யவேண்டும். பயனைக் கருதிச்செய்யும் காரியங்களில், தான் பலன் பெறுவதால் இன்பமும், பெருமையால் துன்பமும் ஏற்படுகின்றன. பயன்கருதாமற் செய்வதால் இன்ப துன்பமற்ற அமைதி கிட்டுகிறது என்று கீதை கூறுகிறது. அதன் பிரதிபலிப்பாகவே அரேலியரும் கூறுகிருர்.

மார்க்க அரேலியர் மரணத்தை ஒரு சிறு நிகழ்ச்சியாக ஸாக்ரடீஸ் போன்றே குறிப்பிடுவர். மரண பயத்தை ஒழிக்க

அடிக்கடி வற்புறுத்துகிருர். உண்மையான வழிச் செல்பவன் மரண பயமின்றி இருந்தால்தான் தீயசக்திகளை அஹிம்சையாலே எதிர்க்க முடியும்.

மரணத்திற்குப் பயப்படாத மனிதனே இல்லை. ஆனுல் மரணத்திற்கும் அஞ்சாதவனே ஞானி. அஞ்சாமையே விவேகம். மனிதன் எப்படி வாழவேண்டும் என்பது பிரச்னையன்று; ஆனுல் எப்படி மாளவேண்டும் என்பதுதான் பெரும் பிரச்னை. மனிதன் பணமும், இன்பமும், புகழும் பெற்று வாழவேண்டுமா? இல்லை. அவை மெய்ப்பொருளல்ல! உள்ளத்திற்கு நிரந்தரஅமைதியூட்டும் வாழ்க்கை முறையைக் காப்பதுதான் விவேகம்! எப்பொருளிலும் காரிய காரணத் தொடர்பை ஆராய்ந்துபார்த்து, நீதி நெறிபிறழாமல் நடந்து, எண்ணம், மொழி, செயல்களில் சத்தியம் வழுவாத் தூய்மையுடன் வாழ்வதே ஒழுங்கான வாழ்வு.

வாழ்க்கை எவ்வளவு குறுகியதாயிருந்தாலும்கூடப் பண்பட்ட இன்பவாழ்வுதான் வேண்டும். ஐந்தாண்டுகட்கு முன்பே இறந்தாலும் அல்லது ஆயிரம் ஆண்டுகட்குப் பின்பே இறந்தாலும் ஒன்றுதான். அன்றுபோலவே இன்றும் வாழப்போகிருய். எல்லாம் பழையதே. மறுபடி மறுபடி நுகர்கிறதால் என்ன பயன்?

அதிக காலம் வாழ்ந்தவர்கள் சிறிது காலம் வாழ்ந்தவர்களைவிட
என்ன பெரிய காரியம் சாதித்து விட்டார்கள்?
அனந்த காலத்தையும் பிரகிருதிப் பொருளையும் நோக்கும்
விசால அறிஞனுக்கு மரணத்தில் துயரமே இல்லை.

ஆதலால் வாழ்வின் சபலமின்றித் தைரியமும், தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் கொண்டு நல் வழியே செல்.

மனித வாழ்க்கை வெறும் செயற்கை. ஆனுல் மனித வாழ்வு இன்பமாயமைவதற்கு இயற்கையை நோக்கிச் செல்லவேண்டும். ரூஸோ மனிதன் தன்னை அறிந்துகொள்ள இயற்கை வழிச்செல்லத் தூண்டுகிருர். நம் ரிஷிகள் தூய வாழ்வை நடத்தி உலகம் உய்ய வேதங்களை அருளினர். இயற்கையிலுள்ள மரஞ்செடி கொடிகள் எப்படி மரண பயமின்றி நியதிப்படி வாழ்கின்றனவோ, அழகும், இன்பமும், அன்பும் ததும்பிப் பூத்துக் காய்த்துப் பழுத்து, அமைதியாய் மடிகின்றனவோ அவ்வாறே நாமும் எல்லையற்ற காலத்திலே இயற்கையாக வாழ்ந்து இன்பமுடனே இறக்கவேண்டும். வாழ்வின் துன்ப அலைகள் பேரிரைச்சலுடன் பயங்கரமாக மோதுங்காலை பாறை போல உறுதியுடன் இருக்கவேண்டும் என்கிருர் அரேலியர்.

இந்நாள்மனிதன் முற்காலமனிதனைவிட நீதி, நாணயம், அனுதாபம், அன்பு, அறிவு, பெருந்தன்மை, பண்பாடு, நாகரிகம் முதலியவற்றில் முன்னேறியிருக்கிறான். ஆனால் பொதுச் சமுதாயமோ, பழைய காட்டுமிராண்டிகளின் தத்துவங்களின்படியே நடப்பதுபோல் தோற்றுமளவிற்கு முன்னேற்றமின்றித் தேங்கிக் கிடக்கிறது. இதற்குக் காரணம், தனிமனிதன் பொதுவாழ்வைப் பொறுத்தமட்டில் மாறாக நடப்பதேயாகும். ஒருவன் சத்தியனா யினும் வியாபாரத்திற்காக ஆயிரம் பொய் சொல்லிப் பிழைக்கவேண் டியவனாகிறான். பொதுவாழ்வில் நல்ல தன்மைகளை மேற்கொள்ளின், அவனை அப்பாவியாகக் கருதுகிறது உலகம். இந்த நிலை மாறினால் தான், மனிதன் திருந்தி மனிதஇனமும் திருந்தும். இன்று தனிமனிதன் அயலார் பொருளை அபகரித்தல் திருட்டெனக் கூறித் தண்டனையளிக்கப்படுகிறது. ஆனால் ஒருநாடு பிறநாட்டைச் சுரண்டி அடிமைப்படுத்தலை ராஜதந்திரம் என்ற பட்டம் சூட்டிப் பாராட்டுகிறது. இந்த முறை மாற அரேலியர் உலகனைத்தும் ஓருயிர் என்றும், ஒப்புரவு, அடக்கம், பொறுமை, மானம் முதலியவற்றில் தோல்வியடையாதே என்றும் கூறுகிறார். இல்லாத பொருளின் மேல் ஆசையடையாதே என்று கூறிச் சுரண்டும் ஆசை மிக்க கடின இதயங்களை மென்சொல்லெனும் சுடுசரங்களால், பணிவிக் கிறார். தேவர்களில் ஒருவனாக வாழ் என்னும் அவரது வாக்கு நீட்ஷேயின் ஜாரரிஸ்டிரரின் அதிமானுடத்தன்மை நோக்கிச் செல் லும் பயணத்தின் வாழ்த்தாகத்தோன்றுகிறது.

அழகின்மையிலும், குற்றத்திலும் அழகைக்கண்டு, பிரகிருதி யின் ஒரு பகுதியாகிய நாம், விவேகத்துடன் ஞானத்தால் ஆத்மா வைத் துக்கத்தினின்றும் மீட்டு, உயர்ந்த சக்திஞானம் பெற்றுய்வது தற்காலத்தில் எளிதோ? நம் வாழ்வு புறச்சூழ்நிலையைப் போராடி வெல்லுவதாக அன்றோ உள்ளது? நமது எண்ணங்கள் லோகாயத வாதத்தை ஒற்றி எழுந்தவைபோல் தோன்றுகின்றன. அரேலியரின் தத்வார்த்தஉபதேசங்கள் பயன்படுமா? என்று வினவலாம். அரேலியர் நமக்கோ, உலகிற்கோ வேதாந்த உபதேசம் செய்ய வில்லை. தாம் தினந்தோறும் பெற்ற சாதாரண அனுபவங்கட்கும், நடைமுறையிலுள்ள அறிவுக்கும் ஏற்பத் தமக்குத்தாமே மொழிந்து கொண்ட சத்திய வாக்குக்கள் இவை. அவர் இவற்றின்படி நடந் தார். இந்நூல் சமுதாயத்திற்கு ஏற்ற அரும்பெரும் நூலாகத் திகழ்கிறது.

"கடவுள் பொய், எல்லாம் தற்செயல்" என்றாலும், நீயும் நியாய மற்று இருக்கவேண்டிய அவசியமில்லை. சாந்தம் இழந்து கவலைப்

படவேண்டியதில்லை. உலகிற்கு ஆத்மா என்பது இல்லை. எல்லாம் அசேதன அணுக்களின் தற்செயல் சேர்க்கையும் பிரிவும் என்று இவ்வாறு நினைத்தாலும் எதற்காக மனம் கலங்கவேண்டும்? உங்கள் உள்ளத்திற் கலங்கும் சேதனப் பொருளுக்குச் சொல்லுங்கள். "சீ! உனக்கு உயிரில்லை; நீ ஓர் உண்மைப் பொருள் அன்று; நீ பொய்". என்ற தைரியத்தையேனும் சொல்லிச் சாந்தமாய் இருங்கள். இவ்வாறு லோகாயதக் கண் கொண்டு வாழ்வை நோக்கி அரேலியர் எல்லாவித மக்களுக்கும் அமைதியான உள்ளம் அவசியம் என்கிறார். ஆத்மீக எண்ணங்களையறியாமல், நாவல்களும் துப்பறியும் கதைகளும் படித்துப் படித்து, சினிமாப் பாட்டுக்கள் மனப்பாடம் செய்து, புறநானூற்றுப் பாடலைப்பற்றிக் கவலையற்றுத்திரியும் மாணவர்களுக்கும், போலி ஆடம்பரத்திற்காகத் தீய செய்கைகள் பழகிவிட்ட இளைஞர்கட்கும் இந்நூல் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

ஆத்ம சிந்தனையிலுள்ள தத்துவக் கருத்துக்கள் நமக்குப் புதியவல்ல. புத்தர் காலத்திற்கு முன்பே இவ்விதத் தத்துவங்கள் நம் நாட்டிற் பரந்து உலவி வந்துள்ளன. நம் நாட்டிலிருந்துதான் இவ்விதமான வாழ்க்கைத் தத்துவங்கள் கிரீஸ், ரோம் நாடுகளுக்குப் பரவின எனலாம். மெகஸ்தனீஸ் இந்தியாவின் சமூகம், பண்பாடு இவற்றைக் குறிப்பிடுகையில் கிரீஸுக்கு மிகவும் ஒத்தனவே என்கிறார். கிரீஸ், ரோம் நாகரிகமே மற்ற ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவிற்று. இவ்வாறு உலகுக்கு வாழ்க்கைத் தத்துவங்களை வழங்கிய நம் நாடு இன்று அவற்றை எல்லாம் மறந்த நிலையில் நிற்கிறது. ஆத்ம சிந்தனை அதனை நமக்கு நினைவூட்டுகிறது.

ராஜ ரிஷியாகிய மார்க்க அரேலியர் தம் ஆத்ம சிந்தனைகளை அனைவருக்கும் பயன்பட அருளியதுபோலவே கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜரிஷியாகிய ராஜாஜி அவர்கள் தித்திக்கும் தமிழில் மொழிபெயர்த்துள்ளது நமது பாக்கியமே யாகும். வடமொழி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழியிலும் புலமையும், ஆராய்ச்சித் திறனும், ராஜதந்திரமும், தத்துவஞானமும் உடைய தலைவரான ராஜாஜி அவர்கள் இந்நூலை மொழிபெயர்த்தது இருளிலேகிடந்தவருக்கு ஒளி விளக்குத்தந்ததுபோலுள்ளது.

கீதையும், குறளும் போலவும், வேதநியதிகள், உபநிஷதங்கள் போலவும், நமக்கு ஆத்மசிந்தனை எனும் இந்த நூல் பெரிதும் உணர்வளிக்கக்கூடும். இந்த அமுதசுரபியிலிருந்து எல்லாத் துறையிலுள்ளவரும் அமைதியெனும் அமுதம் பருகுவர். தமிழ் நாட்டில் இவ்வாத்ம சிந்தனை எல்லாருடைய இதயங்களையும் ஊடுருவிப் புத்துயிரளித்து, அமரத்வத்தைச் சேர்ப்பதாக!

மனோன்மணீயத்துள் நாம் காணும் ஆடவர்

மு. சின்னச்சாமி, பி. ஏ. (பி. டி. மாணவன்)

மனோன்மணீயம் மாண்புமிக்க தமிழ்மொழியில் நமக்குக் கிடைத்துள்ள ஒரே ஒரு நாடகமாணிக்கம். கோகினூர்வைரம் என்றுரைக்கின் அது பொய்யுரையன்று, பொருளுரையே. தமிழ் வானில் வள்ளுவர்போல் கம்பன் கவிதைபோல் மங்கா ஒளிவிட்டு எங்கும் பிரகாசிக்கும் எழின்மிக்க விண்ணொளியாக மின்னுகிறது இந்நாடகம். இதுபோன்றதொரு நாடக நூலைத் தமிழ் முன்னர்க் கண்டதில்லை; காண்பதும் அருமையுடைத்து.

ஒரு நாடகத்தின் சிறப்பு, கதைஅமைப்பிலும், நாடக மாந்தர் குணவளர்ச்சியிலுமே அமைந்து கிடக்கிறது. மனோன் மணீயத்தில் இக்கலைத்திறன் காட்சிதொறும் ஆட்சி செலுத்து கிறது. எதிர்எதிராகத் தலைமாந்தர்களை அமைத்து வேற்றுமை காட்டல், சொல்லாடல்வழிக் குணங்களை எடுத்துக்காட்டல் ஆய இவை தலைமாந்தர்களை அமைக்குங்காற் சிறப்பாகக் காணவேண்டு பவை. ஆசிரியர் உழுந்துருளும் நேரத்திற் பல்வேறு மாந்தர்களாக நடிக்கவேண்டும்; உலகியலின் மாறாது மாந்தர்தம் பண்புகளை அமைப்பதோடு அவர்கள் வாயிலாகவே உலகியலுக்கு அப்பாலும் சிறிது சென்று இப்படியும் இருக்கவேண்டும் என்று கோடிட்டுக் காட்டவும் வேண்டும். மனோன்மணீயத்தில், இவை அனைத்திலும் பொதுவாகவும், மாந்தர்தம் பண்புகளை அமைத்துக் காட்டுவதிற் குறிப்பாகவும், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை "சகப்பிரியன்" (Shakespeare) தலைசிறந்த சீடராக விளங்குகின்றார் எனின், அது உயர்வு நவிற்சியன்று. அவர் மனோன்மணீயத்தில் உலவவிட்டிருக் கும் ஆடவர் உலகவாழ்வின் பல நிலைகளையும் துறைகளையும் சார்ந் தோர். கோமகனையும் குடிமகனையும், யோகியையும் போகியையும், வீரனையும் கோழையையும், சூதனையும் சுத்தனையும் நாம் அங்குக் கண்ணுறுகின்றோம்.

குலகுரு சுந்தரமுனிவர், பாண்டியகுலத்தின் காவல் தெய்வ மென விளங்குகின்றார். குடிலனை நன்கு உணர்ந்து, அவன் தோண்டும் வஞ்சகக் குழியில் வீழ்ந்து அழியாதவாறு அவ்வப் போது, அரசனுக்குக் குடிலனின் நெஞ்சகத்துள்ள வஞ்சனைகளை எடுத்துக்காட்டுகின்றார். ஆபத்திற் கன்னி மனோன்மணியை வெளியேற்றிக் காப்பதற்கெனக்கண்ட கற்படையே குடிலனது சூழ்ச்சியின் கல்லறையாகவும், மனோன்மணியின் மணவறைக்கு வாயிலாகவும், பொருதுநின்ற இரு தமிழ் நாட்டையும் பிணைக்கும்

இணைப்புவழியாகவும் அமைக்கிறார். தன்னலமறுக்கும் அறவீரம் சான்றாண்மை, நுண்மாண் நுழைபுலம் இவை யாவும் சேர்ந்து உழைக்கின்றன. புருசோத்தமனே மனோன்மணியாம் மலர்க்கொடி படரத் தக்கதொரு தரு என்று குறிப்பிட்ட கூர்த்தமதியாளர் இவரே. மனோன்மணி சேரனுக்குத் தார் சூட்டி அவன் தோள் சார்ந்து கண் படத் தலைப்பட்ட குடிலன் தன்முன் நிற்க "நாளை போரிலே காண் போம் நம்நட்பே" என்றுரைத்து வஞ்சியான் விடைகொளச் சினத் தாலும் உளத்தளர்வாலும் செய்வதறியாது நிற்கும் சீவகனை நோக்கி,

"இருமனம் ஏனினி! என்று மிப்படியே
மருமகனும் மகளும் வாழ்க! வாழ்த்துதியே"

என்றுரைத்து வாழ்த்துரை வழங்கச் செய்து சுந்தரம்பிள்ளை நாடகத்தைச் சுபமாக முடித்தார். பாண்டியகுலமெனும் பசுமரம் வேரற்று வீழாமற் பாண்டிநாட்டைப் பார்க்கடிமைசெய்யாதுகாத்த இவரன்றோ குலகுரு!

உலகியலையும் வஞ்சகர்தம் செயலையும் கொஞ்சமுங் காண முடியா நல்ல மனிதனும் மன்னனும் உலகில் உண்டு என்பதற்கு வழுதி சீவகனே எடுத்துக்காட்டு. குடிலன் செய்யும் படிறுகளைக் குடிமகனும் உணர்ந்துவிட்டான்; ஆனால் கோமகன் உணர்ந்தா னில்லை; மாறாக அவனிடம் மட்டற்ற நம்பிக்கைகொள்கிறான். இவனை "வித்தை யுடையான்; பெருஞ்சத்திய விருப்புடையான்; உத் தம ஒழுக்கமுடையான்" என்று நாராயணன் கூறுகின்றான். அத னால், இதே சீவகன் வெளுத்ததெல்லாம் பாலெனும் எண்ணத்தான் என்பதை அறிகின்றோம். "களங்கமில் சுத்தன்" என்று புருசோத்தம னும் இவன் நிலைக்கு இரங்குகின்றான். குடிலன் கூற்றுக்கு "ஆம்!" ஆம்!" என்கின்றான். முனிவர் எடுத்துமொழிந்தால் "இயம்பியது ஒவ்வும்"! என்று இமைப்பொழுதும் தாழ்த்தாது உரைக்கின்றான். "எண்மதி குறித்தாய் எடுத்த கைப்பிள்ளையாய்" என்று சேரர் தூதுவன் கூறியது முற்றும் பொருந்தும். குடிலன் இவனுக்குக் குழிதோண்டும்போது நல்லது செய்வதாக இவன் நம்புகிறான். தலைநகரைத் திருநெல்வேலிக்கு மாற்றக்கூறியதும் மாற்றிவிட் டான். பலதேவனைத் தூது அனுப்பச் சொல்லுமுன் அவனை அனுப்புமாறு வேண்டுகின்றான். நாராயணன் கட்டளையை மீறிவிட்டான் என்று ஆணையிடுகிறது, குடிலனின் சூழ்ச்சி அறியா அவனது அரச நீதி. மனோன்மணியின் வேண்டுகோள் கழுவேற் றலை நிறுத்துகிறது. சகடன் கூற்றுக்கு இணங்கி வாணியைக் கொடியன் பலதேவனுக்கு வதுவை செய்ய வற்புறுத்துகின்றான். கலைஞன் நடராசனைக் கைதவனாகக் கருதுகிறது, அவன் உள்ளம்.

எனினும் உலகியல் அறியாத இந்த நல்லவனிடம் நாம் காணும் சிறந்த பண்புகள் சில அவனது உயர்ந்த மனிதத்தன்மையையும் பண்பாட்டையும் காட்டுகின்றன. சீவகன் தன் மகளிடம் கொண்டிருந்த அன்புக்கு எல்லையே இல்லை. தாய் அற்ற மகளுக்குத் தாயும் தந்தையுமாய் விளங்கினன். "பிள்ளைக்கனியான உனைக்கண்டன்றோ, மறந்தேன் உன் தாய் இறந்த பிரிவும், உன்னையன்றி என்னுயிர்க்கு உலகில் எதுவேஉறுதி" என்று உரைத்துத் தன் மகளுக்காகவே வாழ்ந்த அன்பு வடிவான தந்தை இவன்.

"சுதந்தரம் அவர்க்குயிர், சுவாசம் மற்றன்று" என்று அவன் நாட்டுப்பற்றுப் பேசுகின்றது. போரிலே தாங்கும் புண் "புகழின் கண்" என்று அவன் வீரமுரைக்கின்றது. "நீரும் தாரும் யாரே யளிப்பர் ....மானமே பெரிது" என்று அவன் இற்பிறப்பும் பெருமையும் மானமும் எடுத்துரைக்கின்றன. "மன்னனும் அல்லன் வழுதியும் அல்லன்" என்று சொல்லித் தோல்வி கண்ட அவனது உள்ளம் மாளத் துடிக்கின்றது.

நற்பண்புகள் அமைந்த இச்சீரியோன், குடிலனது கொடுமைகளையும் சூழ்ச்சிகளையும் ஐயமற அறிந்த பின்னரும் அவனைக் கொல்லாமல் விட்டுவிடுகிறான். அவனையும் வஞ்சகத்தையும் கழுவேற்றியல்லவா இருக்கவேண்டும்? "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல்" என்ற வள்ளுவன் கருத்தை எண்ணினனோ? "தெய்வம் நின்று கொல்லும்" எனத் தேர்ந்தானோ? தெரிந்திலது. இந்தக் காட்சியில் நாம் காணும் சீவகன், செகசிற்பியரது 'புயல்' (Tempest) நாடகத்து இறுதிக் காட்சியின் "புராஸ்பரோவை" (Prospero) நினைவுபடுத்துகிறான். சீவகன் நல்லவன், கற்றவன், இலக்கிய அறிவு நிறைந்தவன், சில போழ்து கூர்ந்தறியும் திறனுடையன். கலையழகிற் கருத்தைப் பதிப்பவன் எனினும், மன்னனுக இருக்கத்தக்கவன் அல்லன் என்றே சொல்லத்தோன்றுகிறது.

மனோன்மணீயத்தில் நாம் காணும் குடிலன் "அயாகோ"வையும் (Iago) விஞ்சுகின்றான். குடிலன் என்றால் வஞ்சகன்; வஞ்சகன் என்றால் குடிலன். பெயருக்கேற்றவன். இவன் "சூதே உருவாய்த்தோன்றினன்; ஓதுவது உன்னுவது செய்குவது யாவும் தன்னயமே". எவர் மீதும் இவனுக்கு நம்பிக்கை கிடையாது. தன் குலத்துக்கு ஒரு மைந்தனை பலதேவன்மீதும் இவன் சிறந்த நம்பிக்கைகொண்டானல்லன்; பேச்சாளன்; உயர்ந்த சூழ்ச்சியாளன். அரச தந்திரிகளும் இவனை வெல்ல முடியாதுபோலும்! இவன் செய்த சூழ்ச்சிகளோ எண்ணில.

தலைநகரைத் திருநெல்வேலிக்கு மாற்றுகிறான். மதுரையின் கண் உள்ள வீரர்படை ஆபத்துக்காலத்தில் அரசனது உதவி கைவராவண்ணம் வகை செய்கிறான். "எத்தளபுரி தானிருக்கிலும் எமக்கெல்லாம், அத்த! நின் அருள்போல அரணெது?" என்று கூறிய சீடர்களையும் சுந்தரமுனிவரையும் ஐயுறும் வண்ணஞ் செய்து விடுகிறது அவனது சூழ்ச்சி. "தாதா அன்பு போதாதாகித்" தலைவன் அன்புக்குத் தவித்துத் தளர்ந்து நையும் மனோன்மணியின் நிலையைச் "சுந்தர முனிவரின் மந்திரச் செய்கையோ" என அரசன் ஐயம் கொள்ளச் செய்கிறான்.

மலையமானிடம் செல்லவிருந்த நாராயணன் நிறுத்தப்படுகின்றான். பலதேவன் தூது செல்கின்றான். மணப்பேச்சுப் பகைப் பேச்சாகிறது; மங்கலப்பகை போர்ப்பகையாகிறது. போர்க்களத்தில் இருக்கவேண்டிய சிறந்த வீரர் எண்ணாயிரவர் கோட்டைகாக்கின்றனர். அரசனை மாய்க்கப் போர்க்களத்திற்கு ஆள் செல்லவும் பலதேவனுக்கு மனோன்மணியை மணஞ்செய்ய மன்னன் இசைகிறான். இவை அனைத்தும் குடிலனது சூழ்ச்சி, துரோகம், பேச்சுத்திறன் ஆகியவற்றின் விளைவுகள். மகனுக்கு அரசு கிடைப்பதையும் நம்பாது கற்படைவழி இவனே சென்று அரசனைப் பிடித்துக் கொடுக்க வாக்குறுதி தந்து புருசோத்தமனிடம் அரசுகட்டிலுக்குக் கெஞ்சி நிற்கிறான். மகன்மேல் இவனுக்கு அன்பில்லை. மகனுக்கு இவன் மீது அன்பில்லை. பலதேவனுக்கு இவன் "பணப்பேய்." மகனும் இவனுக்குக் கொடியன். மகனிடம் ஐயங்கொண்டு இவனே ஆள ஆசைகொள்கிறான். பலதேவனின் புண்காட்டி, நாராயணனைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தி அவனைத் தூக்கிலிடச் செய்யக் குடிலன் மேற்கொண்ட பேச்சுத்திறம் அவன் சூழ்ச்சிக்கு வேகமும் ஆக்கமும் தருவதுகண்டு நாம் வியப்புறுகிறோம். சூழ்ச்சித்திறமும் சூதான பேச்சுத்திறனும் சாதாரண நிலையிலிருந்து அவனைப்பிரித்து விடுகின்றன.

கருமேகத்தினிடை ஒளி வீசுவதும் உண்டன்றோ? சூழ்ச்சி உருவத்தை ஊடுருவிக் குடிலனது நன்மனம் சில சமயங்களில் தோற்றுவது கண்டு ஆச்சரியத்தில் ஆழ்கின்றோம், இரங்குகின்றோம்.

> "ஒருவனது ஆசைப் பெருக்கால் உலகில்
> வருதுயர் கடலிற் பெரிதே;
> ....மடுவுள்
> இட்ட கல்லால் எழும் வட்டமாம் விரிதிரை
> வரவரப் பெரிதாய்க் கரைவரை வரல்போல்

நின்ற வில்வீரரை ஒன்றிய மனைவியர்
உற்றார் பெற்றார் ஒட்டா ரென்றிப்
படியே பரவுமே; படியெலாம் துயராம்."

மேற்காணும் குடிலனின் பேச்சு, கடவுட்கும் மனிதனுக்கும் எதிரியாக எழுந்த "சாத்தான்" (Satan) தன்வீரர் படுந்துயர்கண்டு மனம் விண்டு இரங்கி நின்ற நிலையை நினைவிலே எழுப்புகிறது. பாவமேயாகிப் பாவத்தையே பெருக்க எழுந்த "சாத்தான்" மாசறு தெய்விகஅழகு கண்டு மனத்தைப் பறிகொடுத்து ஒரு கணம் நின்றதேபோல், தன் பேராசையைத் தீர்க்க இரத்த வெள்ளத்திலே நீந்திய "மாக்பெத்தின்" (Macbeth) உள்ளத்திலே கணப் பொழுது நன்றியும் அறமும் மின்னிச் சென்றதேபோல், வஞ்சமே உருவாய் அமைந்த குடிலனின் மனமும்,

"கள்ள மனந் துள்ளு மென்பதுந்
தன்னுள்ளந் தன்னையே தின்னு மென்பதுங்
குற்றமுள்ளோர் கோழையே யென்பதுஞ்
சற்றும் பொய்யல சான்று நம்மிடத்தே"

என்று உண்மை ஓர்கின்றது. எனினும் அடுத்த நிமிடமே அதனைச் சீச்சீ என்று ஏசி அடித்துப் பிடித்து அவன் அடிமையாக்கு கிறான். குடிலன் "தீங்காய் உலாவிய சூழற் காற்று, சுற்றி அமிழ்த் தும் சுழல், சூதின் உரு, தொழுத கையினுள் ஒடுங்கிய கொடுவாள், மன்னன் உடனுறைந்த நச்சரவம்" எனினும் தீயவர் முற்றிலும் தீயவரல்லர். நீறுபூத்த நெருப்பென மனிதப்பண்பு அங்கே மறைந்து கிடக்கிறது. குடிலனே இதற்குச் சான்று. தன்னலத்தால் தீமையின் உருவானான்; தன்னலத்தால் அழிந்தான் குடிலன்.

காதலினும் கலையினும் வாழ்வையமைத்து இயற்கையழகின் சிரிப்பிலே இதயத்தைப் பறிகொடுத்த ஆங்கிலக்கவி "வேர்ட்ஸ் வொர்த்தை" (Wordsworth) நம் நினைவிலே எழுப்பிச்செல்கின் றான் நடராசன்.

திருடிய பொன் வளையலின் விலையெனக் காதலைக் கருதி உலவிவரும் பலதேவனைக் காணும்பொழுதெல்லாம் 'எடடா கொலை வாளினை மிகு கொடியோர் செயலறவே' என்று உள்ளம் கனன் றெழுகிறது.

"உலகுளமற்றை அரசரெலாம் கள்ளியும் கருவேற்காடுமாவர்;" புருசோத்தமனோ சகமெலாம் தங்க நிழலது பரப்பும் தன்னிகரில்லாத் தரு; வீரமே அதன் இலை; நற்குணப் பெருக்கம் அது நல்கிடும் மலர்க்கூட்டம் புகழே அவை தம் மனம் உயிர்க்குலத் துன்பம்.

காண்புழித் துடைக்கும் உயரியோன் அவன். ஆன்றவிந்தடங்கிய சான்றேன் சுந்தரமுனி கண்ட புருசோத்தமன். "மனிதனலன் இவன் புனித கந்தருவன்" என்று வஞ்சக்குடிலன் நெஞ்சாரக்கூறும் பெற்றியன். "வஞ்சியான் வஞ்சியான் வெற்றியும் திருடான்" எனும் அவனது சொல்லும் செயலும் இலக்கிய உலகம்படைத்த இணை யற்ற வீரர் வரிசையில் அவனை அமர்த்திவிட்டன.

உயர்ந்த நாடகம் நாற்றமுடைய பொன்மலர்; அதிலும், தேன் மலர். இக் கட்டுரை அம்மலரது நறு நாற்றம் தாங்கிச் செல் லும் தென்றலஞ்சிறுகால். மொழியை அணிசெய்து அதன் புகழ் பரப்புவன நாடகங்கள். அவற்றைச்சுவைக்க அழைத்துச் செல்லு பவை ஆராய்ச்சிக் கட்டுரைகள். சங்க இலக்கியம் நமக்குக் கிடைத்த சுரங்கம் எனினும், மூவேந்தரோடு ஆட்சியிழந்த முத்தமிழ் மீண்டும் அரியணையேறும் இன்று மனோன்மணீயம் போன்ற நாடகங்களும் ஆராய்ச்சிகளும் பலப்பல தோன்றவேண்டும். அவற்றின்வழி நம்மொழி, நாடு, பண்பாடு ஆகியன சிறக்கவேண்டும். இப்பணி இளந்தமிழர் கடன். இக்கடமையை நாம் ஏற்றுச் செயற்பட வேண்டும்.

"..........எழுந்திரு நீ இளந்தமிழா, வரிப்புலியே
பிற்றை நாளுக்
கணி செய்யும் இலக்கியம் செய்!"

சீவகசிந்தாமணி

இல. காளியப்பன், பி. ஏ. (பி. டி. மாணவன்)

சமணசமயம் தமிழ்மொழிக்குப் படைத்தளித்த இனிய இலக்கியங்கள் பல. அவற்றுள் தலைசிறந்த பெருங்காப்பியமாகத் திகழ்வது சீவகசிந்தாமணி. தமிழ் மொழியின் பெருங்காப்பியங்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐந்துமாம். சிலம்பும் மேகலையும் சிந்தாமணிக்குக் காலத்தால் முற்பட்ட பெருங்காப்பியங்களாகும். இருப்பினும் இப்பெருங் காப்பியங்களனைத்தும் சிந்தாமணியையே முதன்மையாகக் கொண்டு எண்ணப்பெறுகின்றன. இஃதொன்றே பெருங்காப்பியம் என்ற முறையிற் சிந்தாமணியின் பெருமையைத் தெள்ளத் தெளிய எடுத் துரைப்பதாகும். முதன்முதலில் விருத்தப்பாவினாலான பெருமை சிந்தாமணிக்கே உண்டு.

* "சீவகசிந்தாமணி தற்போதுள்ள தலை சிறந்த தமிழ் இலக்கியச் சின்னம்; தமிழ்ப் பெருங் காதற்காவியம்; உலகப் பெருங் காவியங்களுள் ஒன்று" என Dr. G. U. Pope அவர்களும்,† "சிந்தாமணி சமண சமயத்தைப் பரப்புவதற்காக இயற்றப்பட்டது; ஆனால், உயர்ந்த இலக்கியப் பண்புகள் பெற்றிராதிருந்தால் இந்நூல் என்றோ காலவெள்ளத்துள் மறைந்து போயிருக்கும்" என்று Julion Vinson என்பாரும்,

* "சீவகன் போல் வீரத்தைக் காதல் தன்னைச்
செப்புவதோர் நூலுண்டோ? தமிழர் நாட்டின்
பாவகன்ற இலக்கியத்தின் அரசு சிந்தா
மணி என்று பகர்ந்திடுதல் மிகையே இல்லை"

என இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர் பாரதிதாசன் அவர்களும் பாராட்டுவதிலிருந்து இந்நூலின் மிக மேம்பட்ட தன்மையினை நன்கு உணரலாம்.

இடத்திற்கு ஏற்ற சொற்கள் எழிலுற அமைந்திருப்பதிலும் (Excellence of diction), நிகழ்ச்சிகளை உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் எழில் குன்றாது இனிமையுடன் படம் பிடித்துக் காட்டியிருக்குந் திறத்திலும் (Superb display) இக்காப்பியம் மிக மேம்பட்டு மிளிர்கின்றது. சுருங்கக்கூறுமிடத்து இலக்கியப் புலவர்க்கு ஓர் இன்பக்கேணியாக விளங்கிவருவது சீவகசிந்தாமணி.

இனிக் கருத்துக் கடலுள் திளைக்க விரும்புவார்க்கும் இந்நூல் பெருவிருந்தளிப்பதாகும். இம்முறையில் நோக்குமிடத்து இதனை ஒரு கருத்துக் கருவூலம் என்றே கூறலாம். யார் யார் எவ்வெக் கருத்தினை நாடி இந்நூலைக் கற்கின்றனரோ அவரவர்க்கு அவ்வக் கருத்தே மிக்குத் தோன்றும் வண்ணம் இப்பெருநூல் அமைந்துள்ளது. உண்மைகாண விழைவார்க்கு வாழ்க்கையை வளப்படுத்துவதும் உயர்ந்ததுமான செம்பொருளே காட்டும் சிறப்பும் சீவக சிந்தாமணிக்கு உண்டு.

---

* "Jeevaka Chinthamani is the greatest existing Tamil literature Monument. The great romantic epic which is at once the Iliad and Odyssey of the Tamil language, is one of the great epics of the world."

—*Dr. G. U. Pope.*

† "..................... it is done for preaching Jainism. It would have disappeared if it had not its literary values"

—*Julion Vinson.*

இத்தலையாய இலக்கியத்தைத் தமிழ் மொழிக்கு ஆக்கித்தந்த பெருமை புலவர்பெருமான் † திருத்தக்க தேவர் அவர்களையே சாரும். † "திருத்தக்க தேவர் தமிழ்க்கவிஞருள் சிற்றரசர்" என வீரமா முனிவர் பாராட்டுகின்றமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இப்பெருங்காப்பியம் எவ்வாறு சீவகசிந்தாமணி எனப் பெயர் பெறுவதாயிற்று என்பதை மட்டும் இக்கட்டுரையிற் காண்போம். காப்பியத்தின் இறுதியிற் காணப்படும்

"முந்நீர் வலம்புரி சோர்ந்தசைந்து வாய்முரன்று முழங்கியீன்ற
மெய்ந்நீர்த் திருமுத் திருபத்தேழ் கோத்துமிழ்ந்து திருவில் [வீசும்
செந்நீர்த் திரள்வடம்போற் சிந்தா மணியோதி யுணர்ந்தார் [கேட்டார்
இந் நீரராயுயர்வ ரேந்துபூந் தாமரையாள் காப்பாளாமே"

என்னும் ஓம்படைச் செய்யுளில், "சிந்தாமணி ஓதி உணர்ந்தார் கேட்டார், இந் நீரராயுயர்வர் ஏந்து பூந்தாமரையாள் காப்பாளாமே" என்னும் பகுதிக்குச் * "சிந்தாமணியென்னு மிச்செய்யுளை, ஓதி யுணர்ந்தாரும், அவர் கூறக் கேட்டாரும் இந்திரராய்ப் பின்பு வீடு பெறுவர்; அவரை இப்பவத்துத் திருமகள் காப்பாளென்க" என்றும், அடுத்துள்ள

† "செந்தா மரைக்குச் செழுநாற்றங் கொடுத்த தேங்கொள்
அந்தா மரையா ளகலத்தவன் பாத மேத்திச்
சிந்தாமணியின் சரிதஞ் சிதர்ந்தேன் தெருண்டார்
நந்தா விளக்குச் சுடர்நன்மணி நாட்டப் பெற்றே"

என்னும் செய்யுளுக்கு, "நந்தா விளக்குச் சுடர் நன்மணியே, நின் பாதமேத்தி, செந்தாமரைக்குச் செழுநாற்றங் கொடுத்த தேங்கொள் அந்தாமரை ஆள் அகலத்தவனை சீவகனின் இனிய சரிதமாகிய

---

* சீவகசிந்தாமணி-சொற்பொழிவு; நினைவுமலர்-பக்கம் 4.

Thiruththakkadevar is a prince among Tamil poets.

Father Beschi.

* சீவக சிந்தாமணி-டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு [பக்கம் 1518.

† செந்தாமரைக்கு நாற்றங்கொடுத்த அந்தாமரை யென்றது, இறைவன் திருவடிகளை. அந்தாமரையை ஆளுகின்ற விரிந்த ஞானத்தை யுடையவ னென்றது, சீவகனை. சிதர்ந்தேனென்றது, பரக்கக் கூறினேனென்றவாறு. அவியாத விளக்கு உள்ளே நின்று எரிகின்ற நன்மணி யென்றது, குருக்களை. (அடிக்குறிப்பு) அந்தாமரையை ஆளும் அகலத்தவன் சரிதமாகிய சிந்தாமணியை நின்பாதமேத்திச் சிதர்ந்தேன். பக்கம் 1519.

சிந்தாமணி சிதர்ந்தேன் என்னும் பொருள்படவும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர் உரை செய்திருப்பதிலிருந்து இக் காப்பியத்திற்கு ஆசிரியரால் இடப்பட்ட பெயர் சிந்தாமணியே என்பது வெள்ளிடை மலையென விளங்கித் தோன்றும்.

சிந்தாமணி என்பது சார்ந்தோர்க்கு வேண்டுவனவெல்லாம் தருவதொரு தெய்வமணியென்றும், அதுபோலவே இந்நூல் கற்பார் கருதும் பொருளனைத்தும் தருவதாதலின் சிந்தாமணி எனப் பெயர் பெறுவதாயிற்று என்றும் சிறப்பித்துக் கூறுதலும் உண்டு.

சிந்தாமணி என்பதை விசையை, தன்மகன் சீவகனுக்கு இட்ட பெயராகக் கொள்வாரும் உளர். * இவர் சுடுகாட்டில் பிறந்த தன் மகனை நோக்கி விசையை, "சிந்தாமணியே கிடத்தியால்" எனப் புலம்பியதைத் தம் கூற்றுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுவர். ஆயின் ஓம்படைச் செய்யுளை உற்றுக்காணும் எவரும் இவர்தம் கூற்றுப் பொருந்தி வாராமையை உணரலாம். எவ்வாறெனிற் கூறுதும்.

ஓம்படைச் செய்யுளுரையில், "சிந்தாமணி யென்னுமிச் செய் யுளை" என்றும், "சீவகனது இனிய சரிதமாகிய சிந்தாமணியை" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதை நோக்குமிடத்துச் செய்யுளே—நூலே 'சிந்தாமணி' என்னும் கருத்துத் தெளிவாதல் காண்க. சிந்தாமணி என்பதைச் சீவகனின் பெயராகக் கொள்ளவேண்டுமாயின், "சீவகனாகிய சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன்" எனவே உரை அமைதல் வேண்டும். ஆயின் இவ்வாறு பொருள் கொள்ளுதற்கு எவ்வகையிலும் இடமில்லை. எனவே சிந்தாமணி என்பதை நூலின் பெயராகக் கொள்ளுதலே பொருந்தும்.

மேலும் இவர் ஆதாரமாக எடுத்துக்காட்டியுள்ள பகுதியின் பொருளைக் கூர்ந்து காணுமிடத்து, 'விசையை தன் மகனுக்குச் 'சிந்தாமணி' எனப் பெயரிட்டாள்' என்று கருத இடமில்லாமையை நன்கு தெளியலாம். எவ்வா றென்பதை விளக்குவேன்.

---

* "நூலுக்குத் தலைவனாகிய சீவகன் இடுகாட்டிற் பிறந்தபோது, அவன் தாய் விசையமாதேவி அவனை நோக்கி, "சிந்தாமணியே கிடத்தியால்" என்று முதலில் விளித்த பெயரே, சீவகனுக்கு முதற் பெயராய் விளங்கிற்று. இதனை வலியுறுத்தவே, திருத்தக்க தேவர் நூலினிறுதியில் ஓம்படைச் செய்யுள் செய்யுங் கால், 'சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன்' என்று கூறினர். இந்நூலின் பெயர் பாட்டுடைத் தலைவன் பெயரை ஏற்று, 'சிந்தாமணி' என்று வழங்கப்படுகின்றது".

[வித்துவான் பண்டித ரா. நடேசநாயகரவர்கள்—சீவகசிந் தாமணி; சொற்பொழிவு—நினைவு மலர், பக். 126.]

"அப்போது அவன் முகப் பொலிவுகண்டு, 'சிந்தாமணியே' எனச் செல்வமாக, விசையை விளிக்க, அஃதே அவன் பெயராய் அமைந்தது.

[வித்துவான் மொ. அ. துரை அரங்கசாமியவர்கள், M. A., M. O. L.–பக் 222.]

காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு என்பது பழமொழி. ஐயறிவினதாய காக்கையே அவ்வாறு கருதுமாயின் ஆறறிவுடைய மாந்தர் மக்கட்செல்வத்தை எங்ஙனம் போற்றார்? "படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப்பெருஞ் செல்வர்க்கும்" வாழ்நாளில் பெறத்தக்க பெரும்பேறு மக்கட் செல்வமே யன்றோ! வறியோரும் தம்மக்களை வானளாவப் புகழ்வதை நாம் வாழ்க்கையில் நாளும் காணலாம். விசையையோ அரசமாதேவி; "மாற்றார் தம் உயிர் மாற்றலிற் கூற்றுவன்" எனச்சிறப்பிக்கப்பெற்ற சச்சந்தமன்ன னின் அருமை மனைவி. அவ்விருவர்க்கும் பிறந்த முதற் குழந்தையும், ஒரே குழந்தையும் *சீவகனே யாவான். முதற் குழந்தை ஆண் மகவாயின் உலகோர் பெரிதும் கொண்டாடி மகிழ்வர் என்பது நாம றிந்ததே. எனவே, அத்தகைய பெருமகிழ்ச்சி விசையைக்கும் ஏற் பட்டிருக்கும் என்பதில் ஐயமும் உண்டோ? அம்மகிழ்ச்சியுணர்வே விசையை தன்மகனைச் 'சிந்தாமணியே' என விளித்தற்குக் காரண மாயிற்று. மணியை மக்கள் எவ்வாறு போற்றிப் பாதுகாப்பர் என் பது உலகோர் அறிந்ததே. ஆயின், "பெருநிலம் ஆளவேண்டிய தன்மணி, இறந்தவர்கள் எரிக்கப்படுமிடத்திற் பிறந்ததே" என்ற எண்ணம் விசையையின் மகிழ்ச்சியை மறைத்து விடுகிறது. எனவே தான் "சிந்தாமணியே" என்று விளித்தவள், "பலர் சூழ்ந்து பாராட்டப்படவேண்டிய நீ, எவ்விதச் சிறப்புமின்றிக் கிடக் கிறாயே" என்ற வருத்தம் தோன்றக் "கிடத்தியால்" எனப் புலம்ப லுற்றாள்.

"அரும்பொற் பூணும் ஆரமும் இமைப்பக் கணிகள் அகன்கோயில்
ஒருங்கு கூடிச் சாதகஞ்செய் தோகை யரசர்க் குடன்போக்கிக்
கருங்கைக் களிறும் கம்பலமும் காசும் கவிகள் கொளவீசி
விரும்பப் பிறப்பாய் வினைசெய்தேன் காண இஃதோ பிறக்குமா"

என்னும் பாடலில் விசையை, தன்மகன் பிறக்கவேண்டிய பெருமை கூறிப் புலம்புதல் காண்க.

எனவே "சிந்தாமணியே கிடத்தியால்" என்பதை, விசையை யின் மகிழ்ச்சியாலும், அம் மகிழ்ச்சியை மறைத்தெழுந்த துக்க மிகுதி யாலும் தோன்றிய சிறப்புமிக்க சொற்றொடராகக் கொள்ளுதலே பெரிதும் பொருந்துவதாகும்.

பின்னர், 'சீவகசிந்தாமணி' என இக்காப்பியம் பெயர் பெற்ற காரணந்தான் என்ன? விளக்குவேன்.

---

* கட்டியங்காரனின் வெற்றி முழக்கம் கேட்டுச் சோர்ந்ததாலேயே மயிற் பொறி கீழிறங்கியது. எனவே விசையை, தன்கணவன் வீழ்ந்துபட்டதை அறி வாளாதலின் அவர்களுக்கு உற்ற மகப்பேறு ஒன்றே யென்பதுபெற்றாம்.

கந்துக்கடன் என்னும் வணிகன் சுடுகாட்டில் விசையையின் மகனைக் கண்டெடுத்தபோது, சினைமறைவிலிருந்து 'சீவ' என்றொரு வாழ்த்துக்குரல் கேட்டது.

"புனை கதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம்
வனை மலர்த் தாரினுன் மறைத்து வண்கையால்
துனை கதிர் முகந்தென முகப்பத் தும்மினான்;
சினைமறைந் தொருகுரல் 'சீவ' என்றதே."

'சீவ' என்ற சொல், சீவிப்பாயாக—வாழ்வாயாக என்னும் பொருளைத் தருவது. வாழ்தலாவது "வையத்துள் வாழ்வாங்கு" வாழ்தலாம். தனக்கே யன்றிப் பிறர்க்கும் பயன்பட வாழ்தலே வாழ்வாங்கு வாழ்தல் எனப்படும். இதனாலேயே கந்துக்கடன் அம்மகவுக்குச் 'சீவகன்' என்றே பெயரிட்டான். சீவகன், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தமையின் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டமை கதையால் தெளிவுறுத்தப்படுதலின் வாழ்த்துக் குரலுக்கு ஏற்பப் பெயரிட்டமை எண்ணி இன்புறற் பாலது.

பிற்காலத்தில்வந்தோர் காப்பியத் தலைவன் பெயராகிய 'சீவகன்' என்பதையும், காப்பியத்தின் பெயராம் 'சிந்தாமணி' என்பதையும் இணைத்து இந்நூலைச் 'சீவகசிந்தாமணி' என்றே வழங்குவாராயினர். சீவகனின் வரலாறுகூறும் நூலைச் 'சீவகசிந்தாமணி' என வழங்குவது முற்றிலும் பொருத்தமுடையதே.

CONNEMARA PUBLIC LIBRARY
23 APR 1957
91
MADRAS

COLLEGE DAY REPORTS

WELCOME ADDRESS

Correspondent Sri T. MANICKAVASAGAM CHETTIAR, B. A.

LADIES AND GENTLEMEN,

I have very great pleasure in welcoming you, Sir, the distinguished President of this evening, to the first College Day celebrations of Thiagarajar College of Preceptors. A brilliant Professor of English and a successful Principal for years, you have been with us at Madurai as Divisional Inspector of Schools of the Madurai Division for nearly a year now. An educationist of ripe experience, you have placed the authorities of this College under a deep debt of gratitude by your presence and wise guidance on more than one occasion. The College is planning to move forward in many directions; starting a High School, organising Extension Services linking up the Training College, the Training Schools and the High Schools in the District on the academic side, etc. I am sure you will continue to show an abiding interest in the welfare of this institution in all aspects of its work giving it, out of your rich experience, sage advice.

I equally welcome you, Madam, to this afternoon's function. You are no stranger to us. As Principal of Fatima College you are rendering distinguished service to the children of the locality. It is very good of you to have found time in the midst of your varied work, especially at this part of the year, to be present with us and kindly distribute the prizes to the winners in the field and in the class.

I now turn to you, ladies and gentlemen, who have responded to our invitation to participate in this the first College Day. I offer you a very warm welcome. Your presence here is an indication, if I may say so, of your appreciation of our work.

Last but not the least, I offer my hearty welcome to you, trainees of the year. You have contributed to the making of history at Madurai by becoming the first set of teacher trainees. Need I say that it has not only placed you in a position of privilege but has put on you a very heavy responsibility? When you successfully get through the ensuing University Examination and join educational institutions in different parts of South India you will be carrying with you the honour and good name of this College. I am sure you will rise to the occasion and become cultural ambassadors radiating wherever you may be the educational ideals for which this College stands. I offer you once more a hearty welcome to the function today and my very good wishes for your success in the Examination.

REPORT ON THE WORKING OF THE COLLEGE DURING 1956-57

Principal S. A. JAIN, M. A., L. T.

It is with feelings of pleasure that I stand before you to present to you a short review of our achievement during 1956-57 on this happy occasion of the First College Day of Thiagarajar College of Preceptors. Before I do so let me offer you, Mr. M. M. Ghani, Miss Shakunthala, Ladies and Gentlemen, a hearty welcome to this great function of ours.

Thiagarajar College of Preceptors is the latest foundation of the Thiagesar Trust, the gift of the noble and generous-hearted Sri Karumuttu Thiagarajan Chettiar and his beloved sons Sri T. Sundarm Chettiar and Sri T. Manickavasagam Chettiar. It is our pleasant duty on this occasion to offer our prayers for the continued prosperity and long life of our Founder-President and his sons.

I took charge as Principal of the College on 21st May 1956, and the inauguration of the College was celebrated on 29th June 1956.

THE STAFF

The teaching staff of the College consists of three Professors, four Lecturers, a Physical Director, a fully qualified Librarian and two part-time instructors in Crafts and Drawing. I would like to express, on this occasion, my grateful thanks to my colleagues for their hearty co-operation. I also express my appreciation of the hard work turned out by the ministerial staff.

Prof. A. Narayana Reddiar was deputed to attend the Southern Regional Educational Conference at Perianaickenpalayam in August 1956. And he will attend the All India Seminar on Evaluation and Examination to be held at Baroda from 15th March 1957. I am happy to state that Mr. S. Sivasubramanyan, our Lecturer in Science, has been awarded a fellowship in the training of Science Teachers in the United States. 'We have indeed much to learn here', he writes from the States. I wish to convey to him the good wishes of his colleagues and students.

OUR STRENGTH

Our strength consisted of sixty students, the maximum strength sanctioned by the University of Madras for this year. Two students left us in the course of the year for taking up other posts for which they were selected. The other 58 students will be taking the B. T. degree examination commencing on 2nd April 1957. In spite of certain handicaps that they had, I think that they created a good impression on the supervising Board of Examiners, who recently conducted the practical tests. It is my earnest hope that they will exert themselves to the maximum and give an excellent account of themselves in the theory examinations, bringing credit to themselves and to their College.

Five of our trainees have been recipients of stipends offered by the Madurai and Ramanathapuram District Boards. Eighteen have been awarded stipends by the Director of Public Instruction. Three students have received Government of India Scholarships. One trainee has been the recipient of a scholarship from the Harijan Welfare Department. Thus nearly half the number of our trainees have received financial assistance from one source or another.

Great variety of talent and skill cannot normally be expected in a small group of sixty, but we are happy to say that we have among our trainees a few orators, poets, writers, actors, athletes and sportsmen. Sri L. Kaliappan is one of our best speakers in Tamil. He was awarded a certificate of merit by the Thiagarajar Arts College for his critical essay on 'Jeevaka Chinthamani'. Sri A. Sankaravallinayagam, our brilliant orator in Tamil, went up to the finals in the University Inter-Collegiate Debate in Tamil, and he narrowly missed the first rank in the final contest.

ACCOMMODATION

The College started work early in July 1956 in a set of buildings placed at our disposal by the Management of the Sourashtra High School. We moved into our own building on 10th February 1957. Our present College building is lovely in the midst of beautiful surroundings, but it is not adequate for all our present or growing future needs. Accommodation has to be found for a hostel for the College, the Model High School, additional playgrounds, Women's Training College and other schemes under contemplation. Our Management, ever eager to provide the best of conditions for work, is handicapped for want of space for expansion. I hope that the Vice-Chancellor, the Director of Public Instruction, the Collector of Madurai and the Government of Madras will help the Management in acquiring the lands available in the neighbourhood of our College.

Let me now turn to review briefly some of our major activities during the year. The Citizenship Training Camp, now an integral part of teacher training, commenced on 27th July 1956 and ended on 5th August 1956. Co-operative living under a democratic set-up was suecessfully attempted at the camp under the guidance of our Camp Officers.

Teaching Practice in schools is the most vital aspect of the Revised Regulations of the B. T. course. The Managements, Headmasters and Senior teachers in the High Schools in Madurai and in Pasumalai readily responded to our request to them to provide the necessary facilities for our trainees to observe lessons, to give lessons and to study aspects of School Organization. I convey on this happy occasion our grateful thanks to the Managements, Headmasters and Supervising teachers of Sourashtra High School, Madura College High School, Setupathi High School, American College High School, Labour Welfare High School, Municipal High School,

Union Christian High School, St. Mary's High School and Pasumalai High School for their hearty co-operation.

THE CENTENARY CELEBRATION

It is a happy coincidence that our College of Preceptors has been established during the Centenary year. The Madras University, one of the oldest Universities in India, to which our College of Preceptors is affiliated, celebrated its centenary at Madras between 28th January 1957 and 1st February 1957. It was a magnificent spectacle attended by distinguished delegates from Universities in India and abroad. The Foundation Stone for the University Centenary Buildings was laid on 31st January 1957 by Pandit Jawaharlal Nehru, the Prime Minister of India. Glowing tributes were paid to the maintenance of high standards and other noteworthy achievements of the University under the distinguished Vice-Chancellorship of Sir A. L. Mudaliar for nearly two decades. The Exhibition at Guindy, the Science Seminar under the distinguished presidency of Sir C. V. Raman at the Senate House, and the sports meet at the Corporation Stadium were other interesting aspects of the Centenary Week programme. The Centenary was also celebrated at Madurai on the 28th January 1957 and 1st February 1957. The Exhibition organised by Thiagarajar College—to which all the Madurai Colleges including ours contributed exhibits—attracted large crowds of people. On 2nd February was laid the Foundation Stone for the Madras University Extension Library in Madurai by Dr. C. P. Ramaswami Iyer. The Centenary address was delivered by Rev. Fr. Jerome D' Souza. Both spoke with glowing pride about the many-sided activities of the University.

I now pass on to refer, with pardonable pride, to the observance of the first Teachers' Convention on 28th February 1957, an event of great potentiality for the progress of Education in our part of the State. Mr. Lloyd Lorbeer presided on the occasion. Mr. M. M. Ghani delivered the Convention address, which made a deep impression on all those assembled. Our aim in organising the Convention was to bring all types of teacher-training institutions together in order to give explicit expression to the feeling of oneness among all grades of teachers. We are conscious that one day our College may become the Teacher-Training Wing of a future University at Madurai, and as such we are already planning for various kinds of Extension Services to link closely, on the academic side, all Training Institutions and Schools. Our thanks are due to the Heads of the Training Institutions, the Staffs and the trainees for the grand success of the function.

Some distinguished visitors addressed our students in the course of the year. Sri N. D. Sundaravadivelu, Director of Public Instruction, gave us the pleasure of welcoming him and listening to his illuminating address on 26th February 1957. Mr. F. L. Billows, Education Officer of the

British Council, gave two demonstration lessons at Sourashtra High School and addressed our students on the Teaching of English in Indian Schools on 5th February 1957.

My task is almost done. I claim, in the words of our President of today, that the teacher is the pivot of all educational activity. His influence does go a long way in moulding the work, attitudes and character of his young pupils. His example is certainly a more potent factor than his teaching. Hence it is of the utmost importance that he must be a model to his pupils. Verily, in the words of Stephen Leacock, the professors bring the students, the students bring, unsought, the benefactions. The teacher's task is an onerous one. He needs plenty of energy if he is to discharge his duties conscientiously. He must also be endowed with great imagination, deep insight, unfailing optimism and an abundant sense of humour. Like the Roman General in front of an impregnable castle, the teacher must be able to say, 'I will find a way or make one'. That is the way to success.

If we, the staff of Thiagarajar College of Preceptors, have succeeded in inspiring our teacher-trainees with a little of this spirit of man's unconquerable mind, we shall cherish this as the greatest reward of our efforts. JAI HIND.

REPORT ON THE WORK OF THE COLLEGE UNION AND ASSOCIATED SECTIONAL STUDY CIRCLES.

Union Secretary Sri A. J. Sams Davis

Mr. President, Ladies and Gentlemen,

I have great pleasure in presenting a short report on the working of the College Union and its associated sectional study circles.

The Inaugural address of the College Union was delivered by Sri M. M. Ghani. M. A., L. T., Divisional Inspector of Schools, on 28th August 1956. Sri T. M. Ramaswamy, M. A. (Cantab), Commissioner, Madurai Municipality, presided.

Independence Day was colourfully celebrated by the Union when our Correspondent Sri T. Manickavasagam Chettiar hoisted the National Flag and gave an illuminating address explaining the significance of the function.

Wild Life Week was observed on the 5th and 8th October 1956 when Miss Whitin, M. A., M. S. (U. S. A.), Professor, Lady Doak College, and Mr. C. J. Raj Singh, B. Sc. (Hons.), A. I. F. C., District Forest Officer, Madurai East Division, respectively addressed the members on the need for the preservation of Wild Life.

The U. N. O. Day was celebrated on 14th November, 1956 when Sri G. Narayanaswami took the chair. Messrs. M. Ramakrishnan,

M. Chinnaswami, A. J. Sams Davis, N. Sadagopan and R. S. Roche spoke on the occasion. The Principal also spoke.

On 15th December 1956 a meeting of the Union was arranged to celebrate the Eighth Anniversary of the Universal Declaration of Human Rights and the Tenth Anniversary of the UNESCO. Sri S. A. Jain, Principal, presided. Messrs. Alagubhoopathy, K. Natarajan, K. G. Venkatachalapathy, L. Kaliappan, A. Sankaravallinayagam, D. Ayyanan and M. Ramakrishnan spoke.

Miss P. Paranjothi, M. A., L. T., M. Ed. (Boston), Headmistress of Capron Hall Training School, Madurai, gave a series of valuable and interesting lectures on different aspects of Education in the course of the year.

Early in 1957, on 17th January, a farewell party was arranged to bid *bon voyage* to Sri S. Sivasubramanyan, B. SC., B. T., our popular Lecturer in Science, who was leaving for the United States under the Teacher Training Programme for Science Teachers.

The members of the Union were addressed by a series of distinguished visitors during the year, among whom may be mentioned Sri N. D. Sundaravadivelu, Director of Public Instruction, Madras, Sri T. K. Shanmugam of T. K. S. Brothers, Sri A. Ramanatha Pillai, M. A., L. T., formerly Deputy Vice Chancellor, Annamalai University, and now Principal of the A. V. C. College, Mayuram.

THE TAMIL ASSOCIATION

After the common Inaugural Address the first ordinary meeting of the Association took place on 6—9—1956 when Sri R. Krishnamurti, Lecturer in Tamil, Madura College, gave an address on 'கவிதை நயம்'. Sri L. Kaliappen also spoke on the occasion. Prof. V. V. Ranganathan, M.A.,M.Ed., presided.

On 11th January 1957 Sri G. Govindarajan, M. A., B. T., Head of the Department of Tamil, Teachers' College, Saidapet, delivered an interesting lecture on the 'Teaching of Poetry in Schools'.

MATHEMATICS ASSOCIATION

Two meetings stand out prominently in the work of this section. Sri B. Gunaraj, M. A., A. M. (Boston), delivered a lecture on 'Non-Euclidean Geometry'. Sri S. Sundararajan, our Vice-President, presided over the meeting. On another occasion Sri S. Sundararajan addressed the members on 'The Evolution of Mathematics'.

SCIENCE ASSOCIATION

On 10—10—1956 Dr. Suryanarayanan, L. M. P., Assistant Health Officer of the Madurai Municipality, delivered a lecture on 'Contagious Diseases'.

An interesting 'Quiz Programme' was conducted on 11–12–1956 in which Messrs. K. A. Srinivasan, S. Venkatachalam, T. Viswanathan, N. Sadagopan, V. M. Dorairaj and G. Varadarajulu participated. Sri S. Vaidyanathan, M. A., B. T., presided on the occasion.

Dr. K. Palaniappan, specialist in Venereal Diseases, gave a lecture on 'The Physiology of Sex, Family Planning and Sex Education.'

SOCIAL STUDIES STUDY CIRCLE

With the College Union the section celebrated the U. N. O. Day, the Human Rights Day, and the UNESCO Day. Sri K. V. Sundaram, M. A. of Thiagarajar College of Arts spoke on 'Democracy and Nationalism' under the joint auspices of the College Union and the Social Studies Study Circle on 26th February 1957. An interesting feature of the work of this section true to its name was the series of discussion meetings on such topics as 'The Second Five Year Plan', 'The Unit Method', 'The Project Method', 'Socialized Recitation' etc. One of the members of the Study Circle presided over the discussion on each occasion and the meetings were largely informal.

Before I conclude I wish to place on record, on my own behalf and on behalf of all the Secretaries, our deep debt of gratitude to our beloved Principal and the Staff, our fellow students and all those who addressed us or participated in our work during the year.

PRESIDENTIAL ADDRESS

Sri M. M. GHANI, M. A., L. T.

Sri M. M. Ghani, M. A., L. T., Divisional Inspector of Schools, Madurai Division, began his Presidential address with a felicitous tribute to the Thiagesar Trust quoting the exquisite Kural

ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

He was sure that the fortunate city of Madurai could look forward to more benefits from the Thiagesar Trust because wealth in the hands of Sri Karumuttu Thiagarajan Chettiar is wealth in the hands of a really wise man.

Sri M. M. Ghani congratulated the Principal and Staff of Thiagarajar College of Preceptors on their good work in the very first year. They had a creditable record; their achievements and variety of talents were quite impressive. Well begun was half done, and so they could look forward to a really great future. This year's students and teachers were all making history, being the first year's batch. It was a great responsibility on them, because the first year's work set the pace and standard for the future. People would be watching the first batch. The first batch thus carried in their hands the good name and reputation of the College wherever they went. They should, therefore, try to express their gratitude to the institution by earnest efforts to be very good teachers.

Sri Ghani advised the trainees to feel that teaching was the most important profession in the world. This was the proper attitude to teaching. Even a feeling of exaggerated personal importance would not be wrong. Teaching was not an easy job but one which required the proper attitude and earnest effort. If the quality of a nation depended upon the quality of its component, constituent units—the individuals—then teaching was easily the greatest profession, because the teacher conditioned the quality of the individual.

A teacher must devote all his attention to teaching. Sri Ghani felt that teaching was not only a 24 hour job, but even a 25 hour job. A conscientious teacher could not have time or inclination for any other work than teaching. He was, therefore, amazed to find that there were many teachers who did many other things besides teaching. There was nothing so ennobling as teaching. The teacher should resist all temptation and devote himself heart and soul to his chosen task.

Teaching was often a monotonous routine but there was no reason why it should be so. In the hands of a really interested teacher, it could be an absorbing, exciting adventure. There was nothing so catching as enthusiasm and so the really enthusiastic teacher could carry any class with him. He should be able to enthuse any class, enlivening it by his own enthusiasm. He should be able to feel very much like the poet who said that he saw naught that was common in God's world.

Sri Ghani then made an appeal to trainees to go to villages as teachers and not persist in seeking work in towns. There was more real work waiting to be done in villages. The thirst for knowledge was abroad and teachers would find themselves eagerly welcomed and honoured in villages if they had the right attitude in them. There was more of opportunity and responsibility in villages. There might be certain disabilities. But they should not mind them. A new India was being built. They should be conscious of being participants in the building up of their mother country and do their best by hard and sustained work.

COLLEGE CHRONICLE

21— 5—1956	Mr. S. A. Jain M. A., L. T., took charge as Principal of the College.
1— 6—1956	Mr. R. Sivagaminathan, B. A., Dip. in Lib. Science, took charge as Librarian.
11— 6—1956	Mr. C. J. Retnasamy, B. A., B. T., Dip in Phy. Edn., joined as Physical Education Director.
15— 6—1956	Mr. A. Narayana Reddiar, M. A. M. Ed., joined as Professor.
21— 6—1956	Mr. S. Sundararajan, B. A. (Hons.), L. T. joined as Lecturer in Mathematics.
do	Mr. V. V. Ranganathan, M. A., M. Ed., joined as Professor.

29— 6—1956	Thiagarajar College of Preceptors was opened formally at 6-30 a. m.
2— 7—1956	The College began regular functioning.
20— 7—1956	Class observation work for trainees began.
27— 7—1956	Citizenship Training Camp began at Muthu Chettiar's Farm, Virahanur.
30— 7—1956	Mr. G. Narayanaswami B. A. (Hons.), L. T., joined as Lecturer in Social Studies.
1— 8—1956	Mr. D. Ebenezer and Mr. J. Stanley joined as Crafts Instructor and Drawing Master respectively.
5— 8—1956	Citizenship Camp ended.
7— 8—1956	Mr. S. Vaidyanathan, M. A., B. T., joined as Lecturer in English.
9— 8—1956	Regular class observation for trainees began.
14— 8—1956	Demonstration lessons were given in Sourashtra High School in all optional subjects.
28— 8—1956	Observation class for trainees in Physical Education, Sourashtra High School.
4— 9—1956	Trainees visited O. C. P. M. Schools (Nursery, Elementary, Middle and High).
20— 9—1956	Mr. S. Sivasubramanyan, B. Sc., B. T., joined as Lecturer in Science.
30— 9—1956	College closed for First Terminal Holidays.
15—10—1956	College reopened for second term.
7—11—1956	Trainees visited Capron Hall Schools.
12—11—1956	Intensive Teaching Practice began.
19—11—1956	Mr. A. Sankaravallinayakam, B. A., Trainee, won in the semi-final debate of the inter-collegiate Tamil Debate organised by the University.
5—12—1956	Intensive Teaching Practice concluded.
14—12—1956	Trainees visited Erskine Hospital, Madurai.
22—12—1956	College closed for Christmas–End of second term.
7— 1—1957	College reopened for Third Term–Second Terminal Examinations commenced.
17— 1—1957	Mr. S. Sivasubramanyan, Lecturer is Science, left for U. S. A. on a Mutual Aid Programme.
28— 1—1957	Participation of the college in the University Centenary celebrations at Madras.

1— 2—1957	Mr. G. M. Gnanapragasam, B. A., B. SC., B. T., joined as Lecturer in Science.
2— 2—1957	Participation in the University Centenary celebrations in Madurai.
5— 2—1957	Mr. F. L. Billows, Education Officer, British Council, gave two demonstration lessons and a talk on the Teaching of English in Indian Schools.
10— 2—1957	College moved into its own buildings.
23— 2—1957	The Supervising Board of Examiners for Practical Tests visited the College.
28— 2—1957	Training Students' Convention observed.
7— 3—1957	College Day celebrated.

CONNEMARA PUBLIC LIBRARY
23 APR 1957
MADRAS

PRINTED AT THE BARATHI PRESS, MADURAI —'57.

CONNEMARA PUBLIC LIBRARY
23 APR 1967
MADRAS

It is the quality that makes

all the difference

We supply furniture to serve all office
and industrial needs

Well built and elegantly Finished
To supply the best quality
is our Motto

For excellent office, School &
Household Furniture

JAYASEELI FURNITURE MART

171/56, Ramnad Road
MADURAI

is always Remembered

We are suppliers to Thiagarajar College of
Preceptors, The Bank of Madura and
Sourashtra High School.

Proprietor : S. M. SOLOMON

நீடித்த
உழைப்பு —
நேர்த்தியான
பைண்டு.

நாணயத்திற்கு
ஏற்றது —
நம்பிக்கைக்கு
உரியது.

மதுரையில்

சிறந்த முறையில் குறைந்த விலையில் உங்களுக்கு வேண்டிய குறிப்பு,
பேரேடு, சிட்டை முதலியனவும், மாணவர்களுக்கு வேண்டிய
எல்லாவித நோட்டுப் புத்தகங்களும் சிலேட்டு, பைல்,
கவர் முதலியனவும் மொத்தமாகவும்
சில்லரையாகவும் கிடைக்குமிடம் :—

கதிர்மணி அக்கவுண்ட் புக் ஷாப்,

37, கீழ ஆவணி மூலவீதி, மதுரை.

For

Halftone, Line, Tri-colour

BLOCKS

Consult :

CITY BLOCK MAKERS

MAHAL VADAMPOKKI STREET

MADURAI

பேப்பர்கள் குறைந்த விலைக்குக் கிடைக்குமிடம்

போன் நிர். 426A

லெக்ஷ்மி பேப்பர் ஸ்டோர்ஸ்

பேப்பர் ஏற்றுமதி & இறக்குமதியாளர்கள்

38, கீழ ஆவணி மூலவீதி,

மதுரை

★ **BALU STUDIO** ★

ARTISTS AND PHOTOGRAPHERS

15, Jadamuni Koil Street :: MADURAI

request the pleasure of your visit with kith and kin
for Excellent & Skilled Photography
Attractive Enlargements
(Portrait & Oil Paintings.)
and elegant Amateur Services.
(Printing & Developing etc.)

Your satisfaction is our aim
Perfect finish is our motto.

N. B.—For Group Photos, both Indoor & Outdoor. Please consult.

கவிச்சக்கரவர்த்தி பாரதியின்

சின்ன சங்கரன் கதை என்ற நூலுக்கு

மேதை ராஜாஜி அவர்களின் வாழ்த்து

C. Rajagopalachari

60, BUZLULLAH ROAD,
THYAGARAYANAGAR,
MADRAS-17
29—6—'56

அன்பும் ஆசியும்

உங்கள் அழகிய வெளியீடு 'சின்ன சங்கரன் கதை'யைப் படித்து முடித்தேன். இன்றுதான் வந்தது.

மிகப் பெரிய பணியைச் செய்திருக்கிறீர்கள் இதற்கு, உங்களை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

புஸ்தகம் இவ்வளவு அழகாக அமைந்து இவ்வளவு குறைந்த விலைக்கு இந்த அரிய நூலை வெளியிட்டது பெரிய சேவை. வழிகாட்டியாகும்.

'கல்கி' கையாடி புகழ்பெற்ற தமிழ் வசன நடை எங்கிருந்து உதயமாயிற்று என்பதை இந்த நூலிலிருந்து கண்டுகொள்ளலாம்.

பாட்டுக்குப் பாரதி என்பது பேருண்மை, அதனுடன் தேன்போன்ற உண்மைத் தமிழ் வசனத்தை எழுதிக்காட்டியவரும் பாரதியே.

திரு. வி. ஜி. சீனிவாசன் அவர்களுக்கும் என் பாராட்டு சொல்லவேண்டும்.

இராசகோபாலாச்சாரி.

★ எமது வெளியீடுகள் ★

அமரகவி பாரதியாரின் தேன்தமிழ் நூல்கள்

தெய்வப் பாடல்கள்	2	0	0	தத்துவம்	2	0	0
பாஞ்சாலி சபதம்	1	12	0	கலைகள்	1	8	0
சுயசரிதையும் பிறபாடல்களும்	1	8	0	மாதர்	1	4	0
கண்ணன் பாட்டு	1	0	0	ஞானரதம்	1	4	0
தேசீய கீதங்கள்	1	0	0	தராசு	1	0	0
குயில்	0	8	0	சந்திரிகையின் கதை	1	12	0
வேதரிஷிகளின் கவிதை	0	8	0	நவதந்திரக் கதைகள்	1	8	0
சமூகம்	3	0	0	சின்ன சங்கரன் கதை	0	12	0
பகவத்கீதை	2	4	0	பாரதியார் சரித்திரம்	0	8	0

எமது விற்பனை உரிமை நூல்கள்

பொய்யாமொழிப் பூஞ்சோலை—	அ. முத்துச்சாமி பிள்ளை	...	2	0	0
ஹாம்லெட் நாடகம் —	தமிழில் கிரிபேந்திரபாபு	...	2	0	0
அரசன் விரும்பிய சேவை —	தமிழில் காமாட்சி ஸ்ரீனிவாசன்	...	0	8	0
செவ்வாய்க்குச் சென்றேன் —	என். கே. எம். டீன்.	...	0	12	0
தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி	...	...	1	0	0

பாரதி புத்தக நிலையம்

டவுன் ஹால் ரோடு :: மதுரை

For BOOKS and PERIODICALS

Contact

ORIENTAL BOOK HOUSE
BOOK-SELLERS, STATIONERS
and
SUBSCRIPTION AGENTS

Post Box 142 ★ 258, West Masi Street,
MADURAI—S. I.

Agents for :
MADRAS & INDIA GOVT. PUBLICATIONS

If Quality & Precision be the aim

"OSAW" INSTRUMENTS are the answer.

Manufacturers :

THE ORIENTAL SCIENCE APPARATUS WORKSHOPS,
Ambala Cantt. (INDIA)

GODREJ

Safes - Steel Cupboards and Shelvings - Steel furniture for Homes - Offices - Hospitals - Windows, Locks & Etc.

for

Quality & the Best

Grams: "SECURITY"

Phone: 723

(Stockists)

S. R. S. BROS.,

45, East Chitrai Street

MADURAI

CONNEMARA PUBLIC LIBRARY



While at Madurai,

Visit

UDIPI BOARDING LODGE

West Masi Street

Wholesome Food
Comfortable
accommodation, Courteous
&
Efficient Service.

Proprietor :
L. NARASINGA RAO

For all Standard and Latest Books on

EDUCATION and TEACHING METHODS

Consult our Quality Lists.

We specialize in Supplies to Libraries of Teachers' Colleges in the State, & always carry good stock of latest English and American books on Psychology & Education

SELECT PUBLISHING HOUSE

46, Third Road
BASAVANGUDI, BANGALORE—4.

For Sports and Games

Please Contact

SEBASTIN SPORTS HOUSE

10, Town Hall Road

MADURAI

★

★ *Quality goods need no praise*

★ *Once used always wanted*

★ *Just try and be convinced*

★

Stockists of citizenship equipment

PRIZE CUPS

MEDALS AND SHIELDS